بسم الله الرحمن الرحيم

அல் கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 2	1925ஆம் டிசம்பர்மீ	பகுதி. 12

மஸ்ஜிதும் அதன் பரிபாலனமும்.

(இமாமுல் ஹிந்துமௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களெழுதியது.)

"அல்லாஹுத ஆலாவின் மஸ்ஜிதுகளைச் செழிக்கச் செய்வோர், அல்லாஹுத ஆலாவின் பேரிலும், கூலிகொடுக்கும் நாளின்பேரிலும் ஈமான்கொண்டு தொழுகையை நிலை நிறுத்தி ஜகாத்தைக் கொடுத்து அல்லாஹ், அல்லாதவைகளைத் தவிர்த்து அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் பயப்படுகிறவரே யாகும். சந்தேக மின்றி இத்தகையோர் நேரானவழியைப் பெற்று சமீபத்தில் ஜயமடைவார்கள்" (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

மக்காவின் முஷ்ரிக்குகள் கஃபாவை பரிபாலித்து அதன் சொந்தக்காரர்களாயிருப்பதாகக் கூறி, அதையொட்டி பெருமை பாராட்டியதோடு இவ்வரிய ஊழியத்தைக் காட்டினும், வேறு சிரேஷ்டமான பாக்கியமேதுவும் உண்டா? யென்று கூறிவந்ததை மறுத்து மேற்கூறப்பட்டுள்ள வியாக்கியானத்தைச் சார்ந்த ஆயத்தை அல்லாஹுத ஆலா அருளினனென்று பல பெரியோர் பகர்ந்துள்ளார். ஆகவே மஸ்ஜிதுகளைக் கட்டி அதை பரிபாலிப்பதன் மூலமாய் நன்மையை அடைவதற்கு அவசியமான நிபந்தனைகளை எடுத்துக்காட்டி இவையன்றி மஸ்ஜிதைப் பரிபாலிப்பதாய்ச் சொல்லிக்கொள்வதால் மட்

பயனடைய முடியாதென்று அல்லாஹுத ஆலா அறிவுறுத்துவதாகத் தெரிகிறது. "மக்காவின் குரைஷிகள் தாங்கள் "ஹரம்" என்னும் பரிசுத்த ஸ்தலத்தில் வசிப்பவர்களென்றும், "மஸ்ஜிதேஹராம்" என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தைச் செழிக்கச் செய்கிறவர்களென்றும் ஹஜ்ஜாஜ் என்னும் உத்தம யாத்திரிகர்களுக்குத் தண்ணீர் புகட்டுகிறவர்களென்றும் (ஆதலின்) தங்களைக்காட்டினும் சிறந்தவர் கிடையாதென்றும் கூறிவந்ததை அல்லாஹுத ஆலா மறுத்திருப்பதாவது:—அல்லாஹுத ஆலாவின் "மஸ்ஜிதுகளைச் செழிக்கச்செய்வோர் அல்லாஹுத ஆலாவின் பேரில் ஈமான் கொண்டிருப்பவர்கள் தான். ஆகவே ஈமான் கொள்ளாதவர்கள் கஃபாவின் முத்தவல்லியாயிருப்பதால் எத்தகைய பலனும் உண்டா?" என்பதே.

(இவ்வாறு 'இப்னு இஸ்ஹாக்' கூறியதாய் 'இப்னுஹமீத்' ரிவாயத்து செய்திருப்பதாக இமாம் திப்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வரைத்திருக்கின்றார்கள்)

'பத்ர்' சண்டையில் ஹஜ்ரத் அப்பாஸ் ராலியல்லாஹு அன்ஹு அவர்கள் கைதி செய்யப்பட்டு வந்திருந்தபோது முஸ்லிம்கள் ஹஜ்ரத் அவர்களைச் சந்தித்து அவர்களின் 'குப்ர்' இரக்கமற்ற செய்கை முதலியவைகளை யொட்டி நிந்தித்தார்கள் (அன்றியும்) ஹஜ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "அலி" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "குப்ர், ஷிர்க்கு ஆகிய இச்செய்கையோடு ஏதேனும் உங்களிடம் நற்காரியங்களுண்டா?" என்று கேட்டதற்கு "அப்பாஸ்" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "எங்களிடம் நற்செய்கைகளில்லையா? நாங்களே மஸ்ஜிதை செழிக்கச் செய்கிறவர்களாயும் கஃபாவை பரிபாலனம் செய்கிறவர்களாயு மிருப்பதோடு ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுகின்றோம்; இதைக்காட்டினும் வேறு நற்செய்கை என்ன விருக்கிறது?" என்று கூறியதை யொட்டி குறிப்பிட்டு அல்லாஹுத ஆலா மேற்கூறிய திருமறையை இறக்கிவைத்தான். என்றும் சில முபஸ்ஸிரீன்கள் கூறி இருக்கின்றனர்.

மக்காவின் முஷ்ரிக்குகள் 'குப்ர்' 'ஷிர்க்கு' ஆகியவைகளைச் சார்ந்த துர்கிருத்தியங்களைப் புரிந்து வந்ததோடு மஸ்ஜிதின் ஊழியம், பரிபாலனம் ஆகியவைகளைத் தங்கள் வகுப்பினர்களே செய்வதாகக் கூறி பெருமை பாராட்டி வந்ததோடு "இவ்வரிய ஊழியத்தை புரிந்து வருமெங்களுக்கு வேறு நற்செய்கைகளைச் செய்யவேண்டுமென்ற அவசியமேது? சிரேஷ்டமான இத்தொண்டிற்கு நிகரான நற்காரி

யம் வேறு எதுவு மிருக்கமுடியுமா ?" வென்று அம்முஷ்ரிக்குள் பகருவது வழக்கம். ஆனால் மக்காவிலிருந்து வந்த முஷ்ரிக்குகளின் இவ்வெண்ணம் தப்பானதென்று அல்லாஹுதஆலா எடுத்துக் காட்டி " கஃபா " வை பாதுகாத்து ஊழியம் புரிவது மட்டும் அங்கீ கரிக்கத்தக்க நற்காரியமல்லவென்று அல்லாஹுதஆலா இத்திருமறையின்மூலமாய் அறிவுறுத்துகின்றான். ஒருகட்டிடத்தின் காவல்காரனும் ஊழியனுமிருப்பதால் ஹிருதயமும் ஆத்மாவும் அடையக் கூடிய நன்மையாது? ஹிருதயமே பரிசுத்தமாக இருக்கவேண்டிய இல்லமும் கீர்த்திக்குப் பிறப்பிடமுமாகும். ஆதலின் ஹிருதயத்திற் கவசியமான லக்ஷனங்களை அடையாத ஹிருதயம் அதை அடைகிறவரை வேறு எக்காரியத்தின் மூலமாயும் கீர்த்தியை எய்தமுடியாது. மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருக்கவேண்டியவர் முறையே கொண்டிருக்கவேண்டிய லக்ஷனங்கள் நான்காகும். அவையாவன:—

(1) அல்லாஹுதஆலாவின் பேரில் ஈமான்கொண்டிருப்பதோடு கூலிகொடுக்கும் நாள் உண்டென்னும் உறுதியைக் கொண்டிருப்பது.

(2) தொழுகையை நிலை நிறுத்துவது.

(3) ஜகாத்தை நிறைவேற்றுவது.

(4) அல்லாஹுதஆலாவை தவிறமற்ற எச்சக்திக்கும், ஸ்தாபனத்திற்கும் அஞ்சாதிருப்பது.

மஸ்ஜிதுகளைக் கட்டுவது பரிபாலிப்பது ஆகியவேலையைச் செய்வோருக்கு மேற் கூறப்பட்டுள்ள நான்கு லக்ஷனங்களும் அவசியமான நான்கு நிபந்தனைகள்போல் அல்லாஹுதஆலா விளக்கியுள்ளான்.

" மஸ்ஜிது " அல்லாஹுதஆலாவை வணங்குவதற்குரிய இல்லமாக இருக்கும் நிலைமையில் இஸ்லாமியகொள்கை, செய்கை ஆகியவைகளில் சம்பந்தமில்லாதோர் அம் மஸ்ஜிதைச் செழிக்கச்செய்கிறவராயும், பரிபாலிப்பவராவும் அதன் முத்தவல்லியாயு மிருக்க எவ்வாறு சாத்தியப்படும். ?

இந்நான்கு நிபந்தனைகளுள் கடைசியாயுள்ள நிபந்தனை எல்லாவற்றிலும் மிகமுக்கியமானதாகும். ஆனது பற்றியே இந்நிபந்தனையை எல்லாநிபந்தனைகளுக்கும் இறுதியாக வெளிடப்பட்டிருக்கின்றது. இந்நிபந்தனை அல்லாஹுதஆலாவின்பேரில் கொண்டுள்ள ஈமானின் சாரமும், இஸ்லாமிய உண்மையின் அடிப்படையுமாகும். அல்லாஹுதஆலாவைத், தவிற மற்றவைகளுக்கு அஞ்சாமல் அல்லா

ஹூத ஆலாவுக்கு மட்டும் பயப்படுகிற ஹிருதயமே அல்லாஹூத ஆலாவின்பேரில் ஈமான்கொண்ட ஹிருதயமாகும்.

அல்லாஹ், அல்லாதவைகள் பெற்றிருக்கக்கூடிய இயற்கையான சக்தியைக் காட்டினும் அவை அதிகபலத்தைக் கொண்டிருப்பதாகவுள்ள தீய கொள்கை, எதிரிகளின் வன்மை, குப்ரின் ஆர்பாட்டம், வழிகேட்டின் செல்வாக்கு, கிரீடம் சிம்மாசனம் ஆகியவைகளின் ஏமாற்றம் முதலிய எதுவும் மிரட்டமுடியாத ஹிருதயமே மூமினின் ஹிருதயமாகும். உலகத்தையொட்டிய சிக்ஷை உலகசம்மந்தமான நற்கூலி ஆகியவைகளைச் சார்ந்த எச்சரிக்கை, அல்லது ஆசை வார்த்தை முதலிய எதுவும் மூமினுடைய ஹிருதயத்தை யசைக்க முடியாது. ஒரு ஹிருதயம் அல்லாஹூத ஆலாவுக்கு எவ்வளவு பயப்படுமோ அவ்வளவே அந்த ஹிருதயம் அல்லாஹூத ஆலாவைத்தவிர மற்றவைகளை யொட்டி அச்சமற்றதாக இருக்கும்.

தன் எதிரிகளின் எக்கொடிய அகங்காரத்தை, இஸ்லாம் மறுத்திருக்கின்றதோ? அக்கொடிய அகங்காரம், இருளடர்ந்த வழிகேடு, "குபுர்" சூழ்ந்த பெருமை ஆகியவைகளில் சிக்குண்டிருப்போர் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர்களெனக் கூறிக்கொள்வது ஆச்சரியமல்லவா? கஃபாவை பரிபாலிப்பது, மஸ்ஜிதுகளைச் செழிக்கச் செய்வது முதலிய நற்காரியங்களைப் புரிகிறவர்களென மக்காவின் முஷ்ரிக்குகள் கூறிவந்தனர். ஆகவே இக்கூற்றை அல்லாஹூத ஆலாவின் திருவசனம் மறுத்து பொய்யாக்கினதுபோல் மக்காதேசத்து முஷ்ரிக்குகளின் தேகசம்பந்தமில்லாத சந்ததிகள் இன்று தங்களை முஸ்லிமென்றும், ஈமான் கொண்டிருப்போரென்றும் அழைத்துக் கொண்டாலுங்கூட அத்திருவசனம் இத்தகையோரையும் கண்டிக்கும் காலம்வந்துவிட்டது. ("கஃபாவை" பரிபாலனம் செய்பவரென்று பெருமை பாராட்டிக் கொண்டிருந்த மக்காதேசத்து முஷ்ரிக்குகளின் கூற்றை மறுக்கப்பட்டிருக்கும்) இவ்வரிய திருமறையை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இன்று மஸ்ஜிதுகளைப் பரிபாலனம் செய்துவருவோரின் நிலைமையை நோக்குவோமாயின் இது பெருங்கவலையாயும் அளவற்ற விசனத்தை மூட்டக் கூடியதாயும் இருந்து வருகிறதல்லவா?

அல்லாஹூத ஆலாவின்பேரிலும், கூலிகொடுக்கும் நாளின் பேரிலும் ஈமான் கொண்டிருப்பதாய் கூறுவதை மெய்ப்பிக்கும் தொழுகையை நிலைநிறுத்தி, ஜகாத்தைக் கொடுத்து வருவதோடு தன் சொற்செயல், நடையுடை பாவனை முதலிய சகலகாரியங்களிலும் அல்லாஹ்,

அல்லாதவைகளுக்கு அச்சமற்றிருப்பவரே மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருக்கமுடியுமென்று இவ்வரிய திருமொழி நமக்கறிவுறுத்துகின்றது. மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருப்பவரை அல்லாஹ் அல்லாத எச்சக்தியும் பயமுறுத்தாமலிருக்கவேண்டும். எப்பெரும் ஸ்தாபனத்திற்கும் அதன் செல்வாக்கு, பலம், பெருமை ஆகியவைகளுக்கும் மஸ்ஜிதுகளின் முத்தவல்லி அஞ்சாதவராக இருத்தல் வேண்டுமென்றும் இத்திருமறை போதிக்கின்றது. உண்மை இவ்வாறிருக்க ஈமானின் குறிப்பான இந்த லக்ஷணங்களில் எதையும் பெற்றிராத சங்கங்கள், இமாம்கள், நாட்டாமைக்காரர்கள் முதலியோர் மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயும், அல்லாஹுதஆலாவுக்குச் சொந்தமான வீட்டின் காவல்காரர்களாயுமிருக்க என்ன பாத்தியமுண்டு ?

அல்லாஹுத ஆலாவுக்கு மாறு செய்யும் அகம்படைத்த முத்தவல்லிகள், முற்றிலும் மக்காவின் முஷ்ரிக்குகளைப்போல் இன்று மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயும் காவல் காரர்களாயும் இருப்பதையொட்டி " குப்ர் " நிறைந்த முறையில் தங்களைப் பாராட்டிக் கொள்ளும் ஸ்திதியில் இவர்கள் இத்திருமறையின் மூலமாய் கண்டிக்கப் படுகிறார்களல்லவா ? மஸ்ஜிதுகளின் மானிபச் சொத்துக்களைத் தங்களின் உலகசம்பந்தமான எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் கருவியாயும், தங்கள் ஷைத்தானிய இன்ப சுகத்தை அனுபவிப்பதற்குத் துணையாயும் செய்துகொள்ளக் கருதி மஸ்ஜிதுகளை தங்களின் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு இவ்வாறு மஸ்ஜிதுகளைத் தங்கள் செல்வாக்குக் குட்படுத்தி யிருப்பதற்கான பாத்தியம் தங்களுக் குண்டென்பதை வெளியிடுவதற்கு எச் சந்தர்ப்பத்திலும் தயாராயிருக்கின்ற முத்தவல்லிகள் எண்ணிறந்து இருக்கவில்லையா ?

இவர்கள் எம் மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருக்க தங்களுக்கு உரிமை உண்டென்று கருதுகின்றனரோ ! அம் மஸ்ஜிதுகளின் (ஷைத்தானின் அடிமைகளான) இம் முத்தவல்லிகள் ஐந்து நேரத் தொழுகையை தொழவேண்டுமென்னும் அருளைக்கூடப் பெற்றிருக்கவில்லை. இக்கொடிய முத்தவல்லிகளின் பரிபாலனத்திற் குட்பட்டிருக்கும் மஸ்ஜிதுகளில் அல்லாஹுத ஆலாவின் அடிமைகள் அணிவகுத்து அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் தலைவணங்கி அவனைப் புகழ்ந்து துதிப்பதில் கவனம் செலுத்தி யிருக்கும்போது இவர்கள் (பாதகச் செய்கைகளின் உற்பத்திஸ்தானமாகிய) தங்களி னில்லங்களில் தீச்செயல்களைப் புரிந்து இன்பமுறுவதில் காலங் கழிக்கின்றனர்.

தொழுகையை நிலை நிறுத்த வேண்டும், ஜகாத்தைக் கொடுக்க வேண்டுமென்னும் உத்திரவுகளுக்குத் தாங்களும் கட்டுப்பட்டு நடந்துக்கொள்ளக் கடமைப் பட்டிருப்பதாய்க் கருதாத முத்தவல்லி களுக்குக் குறைவில்லை. இவர்கள் எந்த அல்லாஹுதஆலாவின் மஸ் ஜிதுகளைப் பரிபாலனம் செய்வதாய் பெருமை பாராட்டுகிறார்களோ? அந்த அல்லாஹுதஆலாவின் உத்திரவுதான் தொழுகையும் என் பதை அறியாதவருங்கூட மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருப் பதைப் பார்க்கலாம்.

இத்தீயவர்களைக் காட்டினும் கொடிய தீயவர்களுண்டா? ஷைத் தான்களின் அடிமையாயும் விக்கிரகங்களுக்குக் கட்டுப்பட்டவர் களாயுமிருக்கும் இப்பாதகர் மஸ்ஜிதுகளின் நிருவாகத்தில் பிரவே சித்து மஸ்ஜிதுகளை அன்னியர்களின் குப்ர் நிறைந்த உத்திரவுக்கும் ஆட்சியின் செல்வாக்குக்கும் உட்படுத்திவிடுவார்கள். அன்றியும் இக்கொடியவர் ஷைத்தான்களின் பலத்திற்கஞ்சி உலக சம்பந்தமான ஆட்சிக்கும் அதிகாரிகளுக்கும் நடுங்கினவர்களாய் அழுதுகொண்டி ருப்பார்கள்.

இத்தகையோர் மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயும் நிர்வாகி களாயுமிருக்க யோக்கியதை யுண்டென்று அறிவிக்கப்படின், குர்ஆன் ஷரீபு, அல்லாஹுதஆலாவின் திருவசன மென்றும், அதனுள்ளி ருக்கும் உத்திரவுகளுக்குக் கட்டுப்படவேண்டியது கடமை யென் றும் உணருகின்ற எவரும் இதற்காதாரங்காட்ட முடியுமா? அல்லா ஹுதஆலாவுக்கு மட்டும் பயப்படுகின்ற உண்மையான மூமினும் பரிசுத்தமான முஸ்லிமாயுமிருப்பவர் மட்டுமே மஸ்ஜிதின் முத்த வல்லியாக இருக்கக்கூடுமென்று மஸ்ஜிதுகளின் சொந்தக்காரனை அல்லாஹுதஆலா கூறும் ஸ்திதியில், அல்லாஹ், அல்லாதவைகளுக் குப் பயந்து அல்லாஹுதஆலாவைவிட்டு அல்லாஹ், அல்லாதவை களுக்குத்தலை வணங்குவோர் அல்லாஹுதஆலாவின் மஸ்ஜிகளைப் பாதுகாப்பவராயும் பரிபாலனம் செய்கிறவராயுமிருப்பது எங்ஙனம்? தனக்குரிய லக்ஷனங்களில் எதையும் சம்பந்தப்படுத்திக்கொள்ள இஷ்டப்படாத சர்வசக்தியுள்ள அல்லாஹுதஆலா மஸ்ஜிது என் னும் பரிசுத்தமான தன் கட்டிடத்திற்குள் எவரும் அல்லாஹ அல்லா தவைகளுக்கு அஞ்சி நடுங்குவதைப் பார்க்கசம்மதியான்................

அல்லாஹுதஆலாவுக்கு மட்டும் அடிமையாயிருப்பவனும் அல் லாஹுதஆலாவுக்கு மட்டும் அடிமையாயிருக்க வேண்டி அல்லாஹ் அல்லாத எல்லா தலைவர்களோடும் சம்பந்தமில்லாது அறுத்துக்

கொண்டவனுமே அல்லாஹுதஆலாவின் வீட்டைப் பரிபாலனம் செய்பவனுவான். ஒரு அடிமை இரண்டு எஜமானரைச் சந்தோஷப் படுத்தி வைக்க முடியாதென்று (மஸீஹ்) கூறியுள்ளார்கள். ஆனால் குர் ஆன் ஷரீபு இதைக்காட்டினும் தெளிவான உதாரணத் தைத் தருகின்றது. "அல்லாஹுத ஆலா எந்த மனிதனுடைய பாரிசத்திலும் இரண்டு ஹிருதயங்களை வைக்கவில்லை (ஒவ்வொரு மனிதனுக்கும்) ஹிருதய மொன்றே." (அல்குர் ஆனின் வியாக்கி யானம்.)

உங்களிடம் ஒரே ஹிருதய மிருக்குமாயின் உங்கள் சிரசு இரண்டு வாயல்களில் பணியமுடியாது. நீங்கள் ஒரே ஹிருதயத்தை யுடையோர்களாயின் நீங்கள் இரண்டு எஜமானர்களின் அடிமைகளாக விருக்கமுடியாது. நீங்கள் அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் சொந்த மான அடிமையாக இருக்கலாம்; அல்லது அல்லாஹ் அல்லாதவைக ளின் உடைமையாயிருக்கக் கூடும். நீங்கள் அல்லாஹுத அலாவுக்கு மட்டும் உரியவர்களாக விருந்தால் அல்லாஹ் அல்லாதவைகளுக்கு அஞ்சி அவைகளின் முன் ஏன் உங்கள் சிரசை வணங்கச் செய்கிறீர் கள்? அல்லாஹுத ஆலாவின் உத்திரவை ஏற்று நடந்து கொள்ளா விடின் பாவம் உண்டு என்பது திண்ணம். ஆனால் அல்லாஹுத ஆலாவின் உத்திரவை மீறுவது குப்ர் அல்லவா? அல்லாஹ் அல்லாத வைகளுக் கஞ்சி நீங்கள் அவைகளின் அடிமைகளாயிருந்து அழிந்து போக இஷ்டப்பட்டீர்களானால் உங்களை எவரும் ஆக்ஷேபிக்காதிருக் கலாம். ஆனால் அல்லாஹ் அல்லாதவைகளின் அடிமைகளாகயிருந்து கொண்டு அல்லாஹுதஆலாவுக்குரிய வீட்டின் தொண்டரென ஏன் பிதற்றுகிறீர்கள்?

அல்லாஹுத ஆலாவின் பேரில் (1) ஈமான் கொண்டு (2) தொழு கையை நிலைநிறுத்தி (3) ஜகாத்தைக் கொடுப்பதோடு (4) ஈமா னின் பஹிரங்கமான லக்ஷனமாகிய அல்லாஹ அல்லாதவைகளைத் தவிர்த்து அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் பயப்படுகிறவரே அல்லாஹுத ஆலாவின் மஸ்ஜிதுகளுக்கு முத்தவல்லியாக இருக்க யோக்கியதை உள்ளவர்களென்று இவ்வறிய திருமுறை மிகத் தெளிவாய் எடுத்துக் காட்டுகின்றது. இந்நான்கு லக்ஷணங்களும் ஒருங்கே அமையப் பெறாத எவரும் அல்லாஹுத ஆலாவின் மஸ்ஜிது களுக்கு முத்தவல்லிகளென்னும் சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு மஸ்ஜிதுகளின் கீர்த்தியைக் கெடுக்கும் வடுக்களாக இருப்பது நியா யமா?

மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயிருக்க யோக்கியதை இல்லாதவர்கள் மஸ்ஜிதுகளுக்கு முத்தவல்லிகளாயிருக்குமிடங்களில் இத்தீயவர்களிடமிருந்து மஸ்ஜிதை மீட்டுக்கொள்வது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் மதக்கடமையாகும். மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயிருக்க யோக்கியதை இல்லாதவர்களிடமிருந்து மஸ்ஜிதை மீட்டு உத்தமர்களிடம் ஒப்புவிக்கவேண்டிய பொறுப்பு அல்லாஹு தஆலாவின் வழிபாட்டில் புரியும் சத்திய பிரசாரமாகும். ஆதலின் இக்காரியத்தை நல்லனவற்றை ஏவி கெடுதியை யகற்றுவதென்னும் ஊழியமாகிய வேலை திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். உண்மையான மூமின்களாயும் நற்கருமங்களைப் புரியும் உத்தமர்களாயும் அல்லாஹு தஆலாவுக்கு மட்டும் பயப்படுகிறவர்களாயும் ஈமானுக்குரிய லக்ஷணங்களை யுடையோர்களாயு மிருப்பவர்களே மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயிருப்பது பொருந்தும்.

"இஸ்லாமும் தேசியத்தொண்டும்."

இஸ்லாமிய சட்டத்தில் செய்கைகளுக்குப் பெரும் மகிமையுண்டு. ஆனால் இஸ்லாம் வெளித்தோற்றமான செய்கைகளைமட்டும் இஸ்லாம் என்று கூறுவதில்லை. 'பிக்ஹ்' என்றழைக்கப்படும் சகல கிரந்தங்களிலும் மதத்தை யொட்டிய செய்கைகளுக்கு வேண்டிய ஒழுங்கு முறையும் சட்டதிட்டங்களும் நிரம்பிக் கிடக்கின்றன. வணக்கம், செய்கை ஆகியவைகளை ஒழுங்காய் நிறைவேற்றும்படி 'குர்ஆன் ஷரீபிலும்' 'ஹதீதுகளிலும்' வெகு கண்டிப்பாய் கட்டளையிடப்பட்டிருக்கின்றது. ஆனால் செய்கைகளைக் காட்டினும் மேன்மையான வஸ்தொன்றுமுண்டு. அதற்கு 'அகீதா' (கொள்கை) எனப் பகருவார்கள். குர்ஆன்ஷரீபில் எவ்வெவ்விடங்களில் 'அமிலுஸ்ஸாலிஹாத்' (நற்செய்கைகளைப் புரியுங்கள்) என்று வந்திருக்கின்றனவோ அவை ஒவ்வொன்றின் முன் 'ஆமினூ' (உறுதி கொள்ளுங்கள்) எனும் பதம் முற்படுத்தப் பட்டிருக்கின்றது. 'ஈமான்', கொள்கை ஆகியவைகள் ஒழுங்கான முறையைக் கொண்டனவாக இராவிடின் எத்தகைய நற்செய்கையையும் 'குர்ஆன்ஷரீபு' உபயோகமற்றதென்றும் வீணானதென்றுமே புகலுகிறது.

கொலைபாதகர், கள்வர் ஆகியவர்களும் தேகத்தில் காயத்தை யுண்டு பண்ணுகின்றனர். டாக்டர்களும் காயப் படுத்துகின்றனர். தோற்றத்தில் இவ்விரு சாரார்களின் செய்கை ஒரேவிதமாக யிருந்தும்

கூட ஒரு சாரார் விரோதியென்றும் மற்றொரு சாரார் நண்பரென்றுங் கருதப்படுகின்றனர். அன்னியர் இறக்கமற்றோர் ஆகியவர்களின் கரங்களால் தேகத்திற்கு உண்டாகும் கஷ்டத்தைப் போலவே, தயைநிறைந்த மாதா பிதா உபாத்தியாயர் ஆகியவர்களின் கரங்களும் துன்பத்தைத் தருகின்றன. இவ்விருவகுப்பார்களின் செய்கைகளும் தோற்றத்தில் ஒன்றாகவிருக்கலாம். ஆனால் ஒருவகையாரிடம் பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்றும், மற்றொருவகை யாருக்கு நன்றி நிறைவேற்றவேண்டுமென்றும் தோன்றுவதேன்? தோற்றத்தில் ஒரேவிதமாக யிருக்கும் செய்கை ஒவ்வொன்றும் தன்னுள் ஓர் உண்மையையும் வைத்திருப்பதாய் பற்பல உதாரணங்களைக் கொண்டு மெய்ப்பிக்கின்றது. எச்செய்கையையும் அதன் வெளித்தோற்றத்தைக் கொண்டுமட்டும் நன்மை அல்லது தீமை, புண்ணியம் அல்லது பாவம் என்று தீர்மானித்துவிட முடியாது. ஒரு செய்கையின் வெளித்தோற்றம் எத்தகையதாக யிருப்பினும் அதனுண்மை வேறுவிதமாயுமிருக்கலாம்.

உறுதியும் செய்கையும்.

இயற்கையான மதம் இயற்கைச் சட்ட திட்டங்களுக்கு முற்றும் ஒற்றதாகவே யிருக்கும். இயற்கைமதமானது அந்தரங்க சுத்தியைப் பொருத்து மிக்க கவனம் செலுத்துவதோடு வெளித் தோற்றமான செய்கை, உருவம் ஆகியவைகளையும் பாதுகாத்து வருகிறது. ஆனால் ஒவ்வொருசெய்கையின் உண்மையையே அச்செய்கையைக் காட்டினும் விசேஷமாக மதிக்கிறது. செய்கையின் உண்மை அச்செய்கையைப் புரியும் வெளித்தோற்றமான அங்கங்களைச் சார்ந்ததல்ல. ஆனால் அது ஹிருதயம், எண்ணம், நாட்டம் ஆகியவைகளைச் சார்ந்ததாகும். 'குர்ஆன்ஹரீபு' 'ஈமான்' என்று கூறுவதை "பல்ஸபீ" தன் அனுஷ்டானத்தில் செய்கையின் தூண்டுகோலென்று கூறுவார். 'ஈமானென்னும்' உத்தம உறுதியைக் கொண்டிருப்போர் தருமம் செய்வது போலவே 'ஈமானில்லாத' காபர்களுங் தருமம் செய்கின்றனர். மூமின்கள் தியாகம் செய்வதுபோலவே மூமினல்லாதவர்களும் தியாகம் செய்கின்றனர். ஆனால் மூமின்களின் செய்கை ஏற்றுக்கொள்ளத் தக்கதாயும், மூமினல்லாதவர்களின் செய்கை மறுக்கக்கூடியதாயு மிருக்கின்றது. மூமின் அல்லாதவர்களின் செய்கை மறுக்கப்படுவது அநீதியல்ல. சந்தேகமின்றி இது நீதியேயாகும்.

லக்ஷியத்தையறிவது வழியைத் தெரிந்துக்கொள்வது ஆகியவைகளுக்குச் சமதையாய் ஈமானையும், லக்ஷியத்தையடையும்பொருட்டு

வழிநடப்பதற்குச் சமதையாய் செய்கையையும் குறிப்பிடலாம். வழிப்போக்கன் தான் செல்லவேண்டிய வழியைத் தெரிந்துகொண்டிருப்பானாயின் அவன் நடை மெதுவாக யிருப்பினும் அவன் அடையக் கருதிய யிடத்தை எவ்வமயமாவது அடைந்து விடுவான். அல்லது வழிப்போக்கன் தானடையவேண்டிய பிடத்தை நாள்தோறும் சமீபித்துக் கொண்டிருப்பானென்பது திண்ணம். ஆனால் தான் செல்ல வேண்டிய வழியை அறியாத வழிப்போக்கன் வழிதவறிச் செல்வதில் கொள்ளும் தைரியம், துரிதம் ஆகியவைகளுக் கேற்ப இவன் லக்ஷியம் இவனைவிட்டு தூரமாகிக்கொண்டே யிருக்கும். வழியை அறியாது வழிநடப்பவன் நன்மையை எய்துவதற்கு பதிலால் கஷ்டத்தை யனுபவிக்கவேண்டிய தாகத்தானிருக்கு மென்பதில் சந்தேகமுண்டா?

'ஈமான்' என்பது என்ன?

படைக்கப்பட்டுள்ள வஸ்த்துக்களின் உண்மை ஒன்றே. 'அல்லாஹ்' படைத்தவன், ரக்ஷிப்பவன், சர்வசக்தியுள்ளவன் இவை போன்ற சகல நாமங்களும் ஒரேஉண்மையைச் சார்ந்த நாமங்கள் தான். இவ்வுண்மையை உணர்ந்து தன் இயல்புக்கேற்ப அல்லாஹுதஆலாவை அறிவதே மனிதனின் காரியமாகும். மானிடனென்னும் வழிப்போக்கனின் லக்ஷியம் அல்லாஹுதஆலாவின் சம்மதத்தைப் பெறுவதாகும்.

இல்லாமையிலிருந்து உண்டென்னும் நிலைமையை அடைவது, உண்டென்பதை விட்டு இல்லாமையில் மீளுவது, மறைவிலிருந்து வெளிவருவது, தோற்றத்தைவிட்டு மறைந்துபோவது ஆகியவைகளில் அடங்கிக் கிடக்கும் லக்ஷியம் மனிதன் அல்லாஹுதஆலாவை தேடுவதும் அடைவதுமே யாகும். இவ்விலக்ஷியத்தை ஈமானென்னும் இஸ்லாமிய பாக்கியமென்றும் கூறுவர். மனிதர்களின்மீது விதிக்கப்பட்டிருக்கும் தொழுகை, நோன்பு, ஜகாத்து முதலிய சகல கடமைகளும் இந்த லக்ஷியத்தை அடைவதற்கான மார்க்கங்களே யாகும். இக்கடமைகள் அவ்விலக்ஷியத்தை அடைவதற்கான கருவிகளென்றும், கூறலாம். இவ்வுண்மையான லக்ஷியம் பரிசுத்தமான ஹிருதயத்தில் வேரூன்றி யிருக்குமாயின் இப்பெரும் லக்ஷியத்தை யடைவதற்கு அவசியமான ஒவ்வொரு வணக்கத்திலும் அளவற்ற இன்பமேற்படும். சாஸ்திரத்தின் ஒவ்வொரு உத்திரவிலும், அவ்வுத்திரவுக்குக் கட்டுப்பட்டு புரியவேண்டிய ஒவ்வொரு செய்கையிலும் ஒரு குறிப்பான உண்மையுண்டு. இவ்வுண்மையை அறியும் சக்தி இல்

லாது போயின் அல்லது இச்சக்தி பலம் குன்றியிருப்பின் வணக்கங்களின் மூலமாய் இன்பமெய்த முடியாது போவதோடு இவ்வணக்கத்தை யொட்டிய உத்திரவுகள் அருத்தமற்றதாகத் தோன்றவுங் கூடும். அன்றியும் இத்தகையோருக்கு தம் வாழ்கை, நிலைதவறியதாயும் புலப்படும். சாஸ்திரம், மதம் ஆகியவைகளின் உண்மையை அறியாதோர் நம்பிக்கை யிழந்தவர்களாயும் சந்தேகத்தால் பீடிக்கப்பட்டவர்களாயும் அடக்கமற்றவர்களாயும் சமாதானம் குன்றியவர்களாயுமிருந்து நரக வேதனைக்கு ஒப்பான கஷ்டத்தில் சிக்குண்டு விடுவார்கள். அல்லாஹுத ஆலாவை அடையவேண்டுமென்னும் லக்ஷியத்தின் உண்மையை அறிந்தோரின் ஹிருதயமே சாந்தம், சுகம், சமாதானம் முதலிய பேரின்பத்தை எய்தமுடியும். மற்ற ஹிருதயங்கள் அந்தகாரமென்னும் இருளில் சிக்குண்டு வழிதவறி இங்குமங்கு மாய் யலைந்து துக்க சாகரத்தில் மூழ்கிவிடும்.

முஸ்லிமின் கடமை.

முஸ்லிமென்று அழைத்துக் கொள்ளும் பொருட்டு ஏதோ சில செய்கையைப் புரிந்து வருவது மட்டும் முஸ்லிமுக்குரிய லக்ஷணமல்ல. இச்செய்கை எத்தகைய கீர்த்தி பெற்றதாக விருப்பினும் சரியே. ஒவ்வொரு செய்கையையும், அதன் உண்மையான லக்ஷியம் கிட்டக்கூடிய முறையோடு புரியவேண்டும். ஒவ்வொரு செய்கையினுடையவும் லக்ஷியம் அல்லாஹுத ஆலாவின் சம்மதத்தைப் பெறுவதே யாகும். 'அல்லாஹுத ஆலாவுக்குச்' செய்ய வேண்டிய வணக்கங்களில் பல நம்மைவிட்டு தவறிக் கொண்டே யிருக்கின்றன. ஆயினும் இன்று வரை ஒரு பெருந்தொகையினர் வணக்கம் புரிந்து வருவதைப் பார்க்கலாம். தொழுகிறவர்களும் நோன்பு நோற்பவர்களும் எண்ணிக்கையில் குறைந்து விட்டார்களாயினும் அத்தகையவர்கள் உலகில் அற்றுப் போனதாகவோ அல்லது அற்றுப் போகும் நிலைமையை அடைந்துவிட்டதாகவோ புகல முடியாது. ஆனால் அசைக்க முடியாத 'ஈமான்' பரிசுத்தமான ஹிருதயம் நல்லெண்ணம் ஆகியவைகளே இன்று உலகில் சந்தேகமின்றி அற்றுப்போய் விட்டன.

நாம் இன்று ஒரு தருமத்தைச் செய்தால் தருமம் செய்ததாய் பிரஸ்தாபமாகவேண்டுமெனக் கருதுகிறோம். ஜனங்களின் நன்றி நிறைவேற்றுதலைப் பெற உத்தேசித்து தருமத்திற் கென்று தொகை வழங்குகிறோம். ஜனங்களிடை பெருமையை சம்பாதிப்பதற்காக மஸ்

ஜித்களைக் கட்டுகின்றோம். இம் மஸ்ஜித்களின் மூலமாய் நம் பெயர் பிரபல்ய மடையவேண்டுமென உத்தேசிக்கின்றோம். சிற்சில சமயங்களில் நம் நாவிலிருந்து உண்மை வெளியாகுமாயின் அதை யொட்டி ஜனங்களின் போற்றுதலை சம்பாதிக்க முயலுகிறோம். ஆனது பற்றியே நம் செய்கைகள் பலனற்றதாகி விடுகின்றன. நாம் புரியும் நற்செய்கையின் பலனை இவ்வுலகில் கண்டு களிக்க சாத்தியமில்லாது போயின் இதை யொட்டி சிறிதளவும் ஆச்சரியமில்லை. காகிதத்தால் தயாரிக்கும் புஷ்பங்களை வேண்டு மளவு மனத்தைக் கவரும் படிச்செய்யலாம். ஆனால் புஷ்பச் சோலையில் உற்பத்தியாகும் இயற்கையான புஷ்பங்களுக்குரிய வாசனையைக் காகித புஷ்பத்திற்குக் கொடுக்க முடியுமா? கல்லை மனிதனைப் போல் அமைத்து விடலாம். ஆனால் இரத்தத்தின் உஷ்ணம், சுவாசம் ஆகியவைகளை யுண்டு பண்ணமுடியுமா?

உலகமும் முஸ்லிம்களும்.

படைக்கப்பட்ட பொருள் அடங்கலும் தங்களைப்படைத்தவன் உண்டெனும் ரகசியத்தைத் தம்முள் கொண்டு தானிருக்கின்றன. ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன, தாவரம், கல்கரடு, மண், தண்ணீர் முதலிய யாவும் மனிதனுக்காகவே சிருஷ்டிக்கப் பட்டுள்ளன. ஆனால் மனிதன் தனக்காகவோ அல்லது மற்ற வஸ்துக்களுக்காகவோ படைக்கப்பட்டவனல்ல. சந்தேகமின்றி மனிதன், அல்லாஹு த ஆலாவுக்காகவே படைக்கப்பட்டிருக்கிறான். இவ் வெண்ணமானது 'ஈமான்' 'குப்ர்' இவ்விரண்டின் எல்லையைப் பிரிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மனிதன் உல்லாசமாய் வாழவேண்டித்தான் பொருள்கள்யாவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற தென்னும் ஏமாற்றத்திற்கு மூமினல்லாதவர்கள் ஆளாகி விடுகின்றனர். ஆனால் மூமின்கள் எத்தகைய ஏமாற்றத்திலும் சிக்குண்டு விடாது உண்மையான லக்ஷியத்தையே கோறி நிற்கின்றனர். அற்ப உலகவாழ்கையின் இன்பத்தி லீடுபட்டு மூமின்கள் தாங்கள் செல்லவேண்டிய பாதையை மறந்து விடுவதில்லை. எந்நிலையிலும் உலகவாழ்கைச் சதமல்லவென்னும் எண்ணம் மூமின்களிடை ஸ்திரமாகவே யிருந்துவரும். "கலீபா" பிரதிநிதி, குமாஸ்தாயென்னு முறையிலேயே உலகில் தங்கியிருப்பதாய் மூமின்கள் கருதுவார்கள். மூமின்களின் ஊண், உறக்கம், நடமாட்டம், விழிப்பு, சிறிப்பு, அழுகை, சிநேகம், விரோதம், அன்பு, வெறுப்பு, கோபம், யுத்தம் சமாதானம்,

ஜீவிப்பு, மரணம் முதலிய யாவும் சர்வவல்லமையுள்ள அல்லாஹுத ஆலாவின் கட்டளைக்குட்பட்டு அவனுடைய சம்மதத்தைப்பெறக் கூடியனவாகவே யிருக்கும்.

உலகத்தின் ஒவ்வொரு வஸ்த்துவும் மனிதனுக்காகவே யுள்ளது. ஆனால் மனிதனுக்காக மனிதனிடத்தில் ஒரு அணுவும் கிடையாது. மனிதனுள்ளிருக்கும் சகலமும் அல்லாஹுத ஆலாவுக்கே உரித்தானவை யென்னும் மறுக்கமுடியாத இவ்வுண்மையை யறிந்த எவரும் மனித வாழ்க்கையை, இலௌகீகம், வைதீகமென இருபாகமாகத் தனித்தனியே பிரிக்கமுற்படுவாரா? முஸ்லிமின் உலகவாழ்க்கை யாவும் அவன் மதத்தைச்சார்ந்ததாயும் இஸ்லாமுக்குக் கட்டுப் பட்டதாயுமே யிருக்கும். மதத்தைச் சாராத உலக வாழ்கை ஏதேனு மிருக்குமாயின் அவ்வுலக வாழ்கையை ஷைத்தானிய வாழ்கை யென்றே தீர்மானிக்கப்படும். மதத்திற்கு சம்பந்த மில்லாத எக்காரியத்திலும் முஸ்லிமுக்கு எத்தகைய பந்தமும் கிடையாது. அல்லாஹுத ஆலா ஏற்படுத்தியுள்ள எல்லைப் பிரமானங்களைக் காப்பாற்று வதற்காகவும், உண்மையை ஆதரித்து ஸ்திரப்படுத்துவதற்காகவும், அல்லாஹுத ஆலாவின் உத்திரவை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்காகவும் போர் புரியப்படுமாயின் சந்தேக மின்றி இப்போர் அல்லாஹுத ஆலாவை வணங்கும் உண்மையான வணக்கமாகும். ஆனால் அதே யுத்தம் சுயநலம் கருதி நடை பெறுமாயின் அதை பெருந்துர் கிருத்தியமென்றும் பாவமென்றும் கொள்ளப்படும், அல்லாஹுத் ஆலாவை அறிவது, உண்மையை உணர்வது, இஸ்லாமுக்குத்தொண்டு செய்வது ஆகிய லக்ஷியங்களை முன்னிட்டு கல்வி கற்க முயற்சிப்பது புகழுடைத்ததாகும். ஆனால் மேற்கூறப்பட்ட லக்ஷியத்துக்காக அன்றி கற்கப்படும் கல்வியையும் கல்வியின்மையையும் இஸ்லாம் வித்தியாசமின்றி ஒரே விதமாகக் கொள்ளுகிறது.

வாரம் ஒருமுறை அல்லது இருபத்துநான்குமணி நேரத்திற்கு ஐம்முறை சில நிமிஷங்கள் அல்லாஹுதஆலாவை தியானித்து விட்டு மற்ற நேரங்களை வேறு இனங்களில் வியர்த்தமாக்குவதை இயற்கை அறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய இஸ்லாம் அங்கீகரிக்க மாட்டாது. ஜீவிய காலத்தின் ஒவ்வொரு நிமிஷமும் அல்லாஹுத ஆலாவின் வணக்கத்திலேயே ஈடாக வேண்டுமென்று மனிதனின் இயற்கையான நல்லறிவு போதிக்கின்றது.

உண்மை இவ்வாறிருக்கும் ஸ்திதியில் ஒரு முஸ்லிமை நோக்கி நீ முதலில் முஸ்லிமா? அல்லது இந்தியனா? என்று வினவுவது பொரு

ளற்ற வினவாகும். ஒரு முஸ்லிம் ஆரம்பத்திலும் கடைசியிலும், மத்திய காலத்திலும் முஸ்லிம் தான் என்பது திண்ணம். எக்காலத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் எந்நிலைமையிலும் ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாதவனுக இருக்க முடியாது. தன் மதம் தன் தேசம் ஆகிய இரண்டிற்கும் தொண்டு புரிய கடமைப்பட்டிருப்பதாக எண்ணி ஒரு முஸ்லிம் தேசத்தொண்டு புரிவதில்லை. ஒரு முஸ்லிம் தன் தேச விடுதலையைக்கோரி புரியும் சேவை சந்தேக மின்றி மதச்சேவையேயாகும். இச்சேவை இஸ்லாம் மதக்கட்டளையாகும். தேச விடுதலையை யொட்டி புரியும் ஊழியம் அல்லாஹுதஆலாவின் கட்டளையை நிறைவேற்றும் அரிய செய்கையாகும். இஸ்லாம் மதத்தைச் சார்ந்த இவ்வுண்மைப் பிரமாணங்களை யறியாத நம் சகோதரர்கள் இவ்விடத்தில் பற்பல விதமாய் தவறு இழைக்கின்றனர். சுயேச்சை பெருவதற்கான கிளர்ச்சியில் இன்று தலைவராய் இருப்போர் நாளை இத்தொண்டை விட்டு விலகிவிடுவதைப் பார்க்கின்றோம். ஆனால் இஸ்லாமின் உண்மையை அறிந்த முஸ்லிம்கள் தேச விடுதலைக்கான தொண்டை அல்லாஹுதஆலாவின் வணக்கமென்றே கருதுவர். ஆனதுபற்றியே இத்தகையோரின் நடையில் விகல்பம் ஏற்படுவதில்லை. இவ்வறிஞர் மற்றவரின் ஆதரவு, எதிர்ப்பு, கூட்டுறவு, பகைமை முதலியவைகளை அலக்ஷியம் செய்தவர்களாய் அறுந்துவிடுமோ? என்னும் அச்சமற்ற அல்லாஹுதஆலாவின் பலமான கயிற்றை இறுகப் பிடித்துக்கொண்டு சதா ஊழியம் புரிவதைக் காணலாம்.

ஈமான் உள்ளவர்களுக்குப் பலமுமுண்டு.

(368 வது பக்கத்தொடர்ச்சி)

(இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களெழுதியது)

"தங்களைத் தாங்களே கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்க" ளென்னும் திருமறையை யொட்டி மேலே வறையப்பட்டிருக்கும் தெளிவான ரிவாயத்துகளும் விரிவுரைகளும் அத்திருமறையின் உண்மையானபொருளைத் தெரிந்து கொள்வதற்கு அதிக ஆராய்ச்சியை அவசியமற்றதாகச் செய்து விட்டன. "தங்களைத் தாங்களே கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்க" ளென்னும் திருமறைக்கு இன்று அறிவிக்கப்படும் பொருளை இஸ்லாமிய ஆரம்ப காலத்து முஸ்லிம்களுள் எவரும் அறியமாட்டார். சோதனைக்குரிய காலங்களிலும்

கஷ்ட நிஷ்டூரமான சந்தர்ப்பங்களிலும் முஸ்லிம்கள் எம்முறையை அனுஷ்டிக்கவேண்டு? மென்னும் வினாவிற்கு விடையளிக்க குர்ஆன் ஷரீபுக்கு மட்டுமே உரிமை யுண்டு. ஆதலின் "பகரா" என்னும் சூராவில் வரைபப்பட்டிருப்பதாவது:—"பத்ர்" யுத்தத்தில் அல்லாஹு த ஆலா உங்களுக்கு தவி புரிந்தான் .அப்போது நீங்கள் க்ஷீண திசையி லிருந்தீர்கள். ஆகவே நீங்கள் அல்லாஹு த ஆலாவுக்கு பயந்து கொள்ளுங்கள். (அன்றியும்) நன்றி நிறைவேற்று கிறவர் களாயு மிருந்து கொள்ளுங்கள். ஓ! நபியே (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) "உங்கள் படைபோதியதாக இல்லை. ஆதலின் உங்கள் நாயன் மூவாயிரம் மலக்குகளை அனுப்பி உங்களுக்கு உதவி புரிய வேண்டும்" என்று முஸ்லிம்களிடத்தில் நீங்கள் சொல்லிக் கொண் டிருந்தீர்கள். நீங்கள் அசைக்க முடியாத உறுதியுள்ளவர்களாயும் அல்லாஹு த ஆலாவுக்குப் பயந்தவர்களாயு மிருக்கும் போது எதிரி கள் உங்களை எதிர்த்துப் போர்புரிய முற்படுவார்களானல் உங்கள் ஆண்டவன் கீர்த்தியும் உயர்வுமுள்ள ஐயாயிரம் மலக்குகளின் மூல மாய் உங்களுக்கு உதவி புரிவான். உங்கள் ஹிருதயம் திருப்தி அடையும் பொருட்டு இந்நற் செய்தியின் மூலமாய் அல்லாஹு த ஆலா உங்களுக்கு உதவி புரிந்தான். அல்லாஹு தஆலா புரியும் உதவியே உண்மையான உதவியாகும். அல்லாஹு தஆலா பெரும் பலமும் சமயோஜித தந்திரமும் உள்ளவனுகும். ஓரளவு காபர் களின் வேரை அறுத்துவிட வேண்டும், அல்லது அவர்கள் தோல்வி யுற்று இழிவான ஸ்திதியில் திரும்பிச் செல்லவேண்டு மென்பது அல்லாஹு த ஆலாவின் உத்தேசமாகும்." (அல்குர் ஆனின் வியக்கி யானம்)

முஸ்லிம்களின் குறிப்பான லக்ஷனம் கீர்த்தி ஆகியவைகளை யெடுத்தோதும் போது ஓரிடத்தில் அல்லாஹு த ஆலா கூறியிருப் பதாவது:—" ஈமான் கொண்டவர்கள் எத்தகையவர்களாயின் எதிரி கள் உங்களை எதிர்த்து போர்புரிவதற்காக ஒரு கூட்டத்தைத் திரட்டி வைத்திருக்கிறார்கள். அக்கூட்டத்திற் கஞ்சினவர்களா யிருந்து வர வேண்டு"மென்று அறிவிக்கப்பட்டால், இவ்வறிவிப்பின் மூலமாய் அவர்களின் உறுதி 'விருத்தியடைந்து "அல்லாஹு த ஆலா எங் களுக்குப் போதுமானவன்; அவன் மிக்கச் சக்தியுள்ளவன்" என்று கூறுகிறவர்களாகும். இவர்கள் அல்லாஹு த ஆலாவின் நன்கொடை, அருள் ஆகியவைகளைப்பெற்று திரும்புவார்கள். அவர்களை எத்தகைய சங்கடமும் அணுகாது. அல்லாஹு த ஆலாவின் சம்மதத்திற்கே

கட்டுப்பட்டு இருப்பார்கள். அல்லாஹுத ஆலாவின் நன் கொடையே மிகப் பெரியதாகும். ஷைத்தானிய குணமுள்ள நண்பர்களே, ஷைத்தான்கள் பயமுறுத்திக் கொண் டிருக்கிறார்கள். ஆதலின் ஈமான் கொண்டவர்களாகிய (நீங்கள்) அந்த ஷைத்தான்களுக்கு அஞ்சக் கூடாது. (உண்மையாகவே) நீங்கள் ஈமான் கொண்டவர்களாயின் எனக்கே பயப்பட வேண்டும்.'' (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

முஸ்லிம்களுக்கு இன்னின்ன சேதனைக்குரிய காரியங்கள் நிகழப் போகின்றன வென்பதை யொட்டிய முன்னறிக்கையின் இறுதியில் அறிவுறுத்தப்பட் டிருப்பதாவது;—''முஸ்லிம்களே ! உயிர் பொருள் ஆகியவைகளின் மூலமாய் உங்களைப் பரிக்ஷிக்கப்படும். உங்களுக்கு முன் வேதங்கள் அளிக்கப்பட் டிருந்தவர்களாலும் (யூதர், கிருஸ்தவர்) முஷ்ரிக்குகளாலும் நீங்கள் பல சங்கடங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆகவே நீங்கள் உறுதியுள்ளவர்களாயும் அல்லாஹுத ஆலாவுக்குப் பயந்தவர்களாயுமிருந்தால், சந்தேக மின்றி இவை பெருந்தைரியமான காரியங்களே யாகும். (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

கஷ்டங்களை விட்டுத் தப்பிக் கொள்ள வேண்டி காபர்களிடம் சிநேகம், சம்பந்தம் ஆகியவைகளை ஏற்படுத்திக் கொள்ள முற்பட்டவர்களின் வழி கேட்டையொட்டி அல்லாஹுத ஆலா எச்சரித்ததாவது:-எவர்களின் ஹிருதயங்களை ''நிபாக்'' என்னும் வியாதி பிடித்து விட்டதோ அவர்கள் ''யூதர்'' ''கிருஸ்தவர்'' ஆகியவர்களோடு சிநேகத்தை யுண்டுபண்ணிக் கொள்ளுவதற்காக மிக தீவிரமாய் முற்படுவதை நீங்கள் காணுவீர்கள். அன்றியும் இவர்கள் ''இவ்வாறு சிநேகத்தையுண்டு பண்ணிக்கொள்ளாவிடின் நாங்கள் ஏதேனும் கேட்டில் சிக்குண்டு விடுவோ மென்னும் அச்சம் இருந்து வருகிறது'' என்றும் பகருவார்கள். (இந்நிலைமையில்) சில தினங்களுக்குப் பின் அல்லாஹுதஆலா முஸ்லிம்களுக்கு க்ஷேமத்தையளித்து விட்டால், அல்லது இத்தீயோரின் இரகசிய எண்ணம் வெளியாகக் கூடிய கருமத்தை அல்லாஹுதஆலா நிகழ்த்தி விட்டால் அப்போது ''இம்முனபிக்'' கள் தாங்கள் ஹிருதயங்களில் மறைந்து வைத்திருந்த விஷயத்தை யொட்டி வெட்கப் படுவார்கள். (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

ஆதரவில்லாத நிலைமையிலும் சக்தியற்ற காலத்திலும் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? இதை யொட்டி குர் ஆன் ஷரீபு இடும் கட்டளையாவது :—

"எத்தனையோ நபிமார்கள் சென்றிருக்கின்றனர். அந்த நபிமார்களோடு சேர்ந்து யுத்தத்தில் பல உத்தமர்கள் ஈடுபட்டார்கள். அல்லாஹுதஆலாவின் வழிபாட்டில் அனுபவிக்க வேண்டியதாகயிருந்த கஷ்ட நிஷ்டூரங்களை முன்னிட்டு இவ்வுத்தமர் தைரியத்தை இழந்து விடவுமில்லை. இவ்வுத்தமரிடம் சோம்பல், பலஹீனம் ஆகியவைகள் தோன்றவுமில்லை. அன்றியும் இவர்கள் (கெடுதிக்கு) தலை வணங்கவில்லை. (அல்லாஹுத ஆலாவின் வழிபாட்டில்) அசைக்க முடியாத உறுதிகொண்டிருப்போரை அல்லாஹுதஆலா நேசிக்கின்றான். "எங்கள் ரக்ஷகனே! எங்கள் பாவங்களைப் பொறுத்து எங்கள் வேலையில் நிகழும் தவறுகளை மன்னித்தருள். எங்களை நல்லுறுதியுள்ளவர்களாகச் செய்து எங்களுக்குக் காபர்களின்மீது ஜயத்தைத் தந்தருள்." என்பதைத் தவிர்த்து வேறெதையும் அவ்வுத்தமர்கள் கூறவில்லை. (ஆகவே) அல்லாஹுதஆலா உலகில் அவ்வுத்தமர்களுக்கு நற்கூலி கொடுத்தான். இன்னும் (அவ் வுத்தமர்களுக்கு அல்லாஹுத ஆலா) மறுமையில் அளிக்கும் பாக்கியத்தைப் பற்றி கேட்கவும் வேண்டுமோ? நற்கருமங்களைப் புரிகிறவர்களே அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் அங்கீகரிக்கத் தக்கவர்கள்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்)

காபர்களின் அடிமையாகி குருட்டுத்தனமாய் அவர்களுக்குக் கட்டுப்படுவது முஸ்லிம்களுக்கு நன்மையா? அல்லது தீமையா? என்பதை யொட்டி தேவநெறி கூறும் விபரம் வருமாறு:—"முஸ்லிம்களே! நீங்கள் காபர்களுக்குக் கட்டுப்பட்டு விடுவீர்களாயின் முன்னேற்ற மடைவதற்கு பதிலாய் ஒதுக்கித் தள்ளப்படுவீர்கள். பிறகு இக் கேட்டின் காரணமாய் இம்மை மறுமை ஆகியவைகளின் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளுவீர்கள். காபர்கள் உங்கள் நன்மையைக் கோறியவர்களல்ல. சந்தேகமின்றி உங்களுக்கு நன்மை புரிகிறவன் அல்லாஹுத ஆலாதான். இன்னும் உதவி செய்கின்றவர் யாவரையும் விட உதவி புரிவதில் சிரேஷ்டமானவன் அல்லாஹுத ஆலாதான்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்)

மேற் கூறப்பட்டுள்ள திரு மறைகளின் சாரம்:—

I

சக்திக்குறைவை, துர் அதிர்ஷ்டமென்று தீர்மாணிக்கமுடியாது. முஸலிம்கள் எத்தகைய க்ஷீனதிசைக்கும் உட்பட்டிருக்கக் கூடும். ஆனால் அவர்களிடை இஸ்லாமிய வாடை எஞ்சியிருக்குமாயின் அவர்களுக்கு அல்லாஹுத ஆலா உதவிபுரிவா னென்பது திண்ணம். இவ்

வுதவி, மலக்குகளின் சொரூபத்திலும் இரங்கக் கூடும். இம் மலக்குகள் குர்ஆன் ஷரீபின் வியாக்கியானக் கருத்தாக்களான முபஸ்ஸிரீன்களுள் பெரும் பான்மையோர் கூறுவதற்கேற்ப உண்மையாகவே மலக்குகளா யிருந்தாலும் சரி, அல்லது "அபூபக்கர் அஸம், என்னும் முபஸ்ஸிர் கூறியிருப்பதுபோல் மனத்திருப்தி ஆத்மபொறுமை ஆகியவை யெனக்கொண்டாலும் சரி. (தப் ஸீர் கபீர் இரண்டாவது வால்யூம், 255வது பக்கம்.)

சாதாரண உதவியைத் தவிற மற்றவையாவன:—

(1) முஸ்லிம்கள் அசைக்க முடியாத உறுதியைக் கொண்டவர்களா யிருப்பார்களாயின். (2) முஸ்லிம்களுள் இஸ்லாமிய Character (தக்வா) நல்லொழுக்கம் குடிகொண் டிருக்குமாயின். (3) முஸ்லிம்களை நாற்புறமும் "குப்பார்"கள் சூழ்ந்துகொண்டிருக்கும் நிலைமையில் காபர்களின் கூட்டம் முஸ்லிம்களின்மீது பாய்ந்துவிழ முற்படுமாயின், இந்நிலைமையில் இஸ்லாம் பலங்கொள்வதற்கு வானத்தின் உயர்வான உதவியை எதிர் பார்க்கலாம். ஆனால் மேற்கூறப்பட்டுள்ள நல்ல லக்ஷணங்களை முஸ்லிம்கள் இழந்திருப்பார்களாயின் இழிவு க்ஷீணதிசை ஆகிய கேட்டி லிருந்து முஸ்லிம்கள் மீட்சியடையக் கருதுவது உபயோகமற்ற எண்ணமாகும்.

காபர்களின் முன்னேற்றம் தடையுறவேண்டுமென்றும், ஓர் அளவு காபர்களொழிய வேண்டுமென்றும் கருதி இதை பூர்த்தி செய்விக்க அல்லாஹுதஆலாவும் தயாராக இருக்கிறான். ஆகவே அல்லாஹுதஆலாவின் இவ்வரிய நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதற்கு நாமும் தயாரக இருப்பதாய் நிரூபிக்க வேண்டும்.

II.

முஸ்லிம்களின் "மிஷின்" காபர்களின் பெருங்கூட்டத்தைக் கண்டு அஞ்சக்கூடியதல்ல. முஸ்லிம்கள் பலம் குறைந்திருப்பதாகக் கருதி முஸ்லிம்களைப் பயமுறுத்தக்கூடிய சக்தி காபர்களுக்குக் கிடையாது. காபர்கள் சூழ்ந்து கொண்ட வேளையில் முஸ்லிம்களின் ஈமானுக்குரிய சக்தி அதிகரிக்கவேண்டும். காபர்கள் நாற்புறமும் சூழ்ந்து கொண்டவேளையில் அல்லாஹுதஆலாவை நம்பினவர்களாய் முஸ்லிம்கள் காபர்களை எதிர்க்க எழுந்து நிற்பார்களாயின் முஸ்லிம்கள் ஜயமடைவார்களென்பதில் சந்தேகமில்லை.

முஸ்லிம்களுக்குக் கேடிழைக்கக் காபர்களால் முடியாது. முஸ்லிம்களைத்துன்புறுத்தக் கூடிய சக்தி காபர்களிடம் கிடையாது. முஸ்லிம்கள் நல்ல முடிவை எய்துவது திண்ணம். முஸ்லிம்கள்

ஜெயமுற இவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளைக்குட்பட்டவராயிருக்க வேண்டியதே, முக்கிய நிபந்தனையாகும். மனிதர்களை ஷைத்தான்கள் பயமுறுத்துவது உண்மையே. ஆனால் அல்லாஹு தஆலாவின் அடிமைகளாயுள்ளவர்கள் ஷைத்தான்களுக்கு எவ்வாறு பயப்படக்கூடும்? காபர்களின் கூட்டம் அச்சமுறுத்தக் கூடிய வண்மை யுள்ள வஸ்துவல்ல. காபர்களிடம் அன்பும் ஆதரவும் கொள்ள முடியாது. ஹிருதயத்தில் ஈமான் குடிகொண்டிருக்குமாயின் அல்லாஹு தஆலாவுக்கு மட்டுமே பயப்பட வேண்டும். ஈமான், காபர்களின் அச்சம் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வஸ்துக்களாதலின் இவ்விரண்டும் ஒருஹிருதயத்தில் சேர்ந்திலிருக்க முடியுமா?

III

கஷ்ட நிஷ்டூரங்களின் மூலமாய் முஸ்லிம்கள் சோதனைக்காளாகாமல் தப்பமுடியாது. யூதர், கிருஸ்தவர் ஆகியவர்களிழைக்கும் துர்க்கிருத்தியங்களால் முஸ்லிம்களின் உயிரும் பொருளும் நஷ்டமாகியே தீரும். ஹிஜ்ரீ இரண்டாம் நூற்றாண்டு முதல் இன்றுவரை முஸ்லிம்களுக்குக் கேடிழைப்பதில் இவ்விருவகுப்பாருள் கிருஸ்தவர் முன் அணியில் இருந்துவருகின்றனர். கிருஸ்தவர் முஸ்லிம்களுக்கு இழைக்கக்கூடிய கேடுகள் முஷ்ரிக்குகள் இழைக்கும் கேடுகளுக்கு எவ்வகையிலும் குறைந்ததல்ல. (கிருஸ்தவர், யூதர், முஷ்ரிக்குகள் ஆகியவர்களால்) எண்ணிறந்த சங்கடங்களை முஸ்லிம்கள் அனுபவிக்க வேண்டித்தானிருக்கும். எத்தகைய சங்கட நிலைமையிலும் முஸ்லிம்கள் தைரியமாயும், உண்மையான உறுதியை இழக்காதவர்களாயுமிருப்பதோடு ஆத்மசுத்தி நல்லொழுக்கம் ஆகிய ஆயுதங்களைக் கரத்தில் தாங்கினவர்களாயிருப்பார்களாயின் முஸ்லிம்கள் க்ஷீனதிசையை அடைவதெங்ஙனம்? ஒரு சமயத்தில் முஸ்லிம்கள் அடங்கினாலும் "அவர்கள் மீண்டும் வெகு துரிதமாய் உயர்வை அடைந்து விடுவார்களென்னும்" அல்லாஹு தஆலாவின் வாக்குறுதியை வெகுகாலத்திற்கு எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமிராது.

"அல்லாஹு தஆலாவைக் கொண்டு "ஈமான்" கொண்டவர்கள், அல்லாஹு தஆலா ஒருவனென்று உறுதிசெய்வதற்குரிய திருமொழியின் பொருட்டால், இம்மை மறுமை ஆகிய இருவாழ்க்கைகளும் அசைக்க முடியாது சிறப்புற்றிருக்கும்படி அல்லாஹு தஆலா(உதவி) புரிவான். அநியாயக்காரர்களுக்கு அல்லாஹு தஆலா நல்வழியை

மறைத்து விடுவான். (அன்றியும்) அவன் நாடியவாறு செய்யக்கூடிய வனாகும்'' (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

IV

முஸ்லிம்கள் காபர்களிடத்தில் எத்தகைய சம்பந்தத்தையும் வைத்துக்கொள்ளக்கூடாது. முஸலிம்கள் அவர்களின் சம்பந்தத்தை விட்டு நீங்கி இருக்க வேண்டியது அவசியமாகும். காபர்களிடம் சம் பந்தம் வைத்துக் கொண்டிருக்கும் முஸலிம்களும், காபர்களை விட்டு ஒதுங்கியிருப்பதால் தமக்கும், தம் சமூகத்திற்கும் சங்கட மேற்படு மென்று நினைக்கின்ற முஸலிம்களும் உண்மையை உணராதிருக்கின் றனர். ஆகவே இஸ்லாமுக்கு ஜயமேற்பட்டுவிட்டபோது, அல்லது முஸ்லிம்களுக்கு க்ஷேமமுண்டாகி விட்ட காலத்தில் உண்மையை உணர்ந்து நடந்து கொள்ளாத அம்முஸ்லிம்கள் வெட்கப்படுவார்க ளென்பது திண்ணம். வீணை சந்தேகத்தில் சிக்குண்டு காபர்களிடம் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்த முஸ்லிம் என்போர் இஸ்லா முக்கு க்ஷேமம் ஏற்பட்டு விட்டபோது வெட்கப்படுவதால் பயனேற் படப் போவதில்லை.

V

முஸ்லிம்கள் எத்தகைய விசனகரமான பலஹீனத்தின் வியாதி யால் பீடிக்கப் பட்டிருப்பினும் எத்தகைய அசக்தி, க்ஷீனதிசை, இழிவு ஆகியவைகளால் சூழப்பட்டிருப்பினும் முஸலிம்கள் தங்கள் விரோதிகளை எதிர்ப்பதற்காக எழுந்து நிற்பார்களாயின் தோற்றத்தி லிருந்துவந்த பலஹீனங்கள் முஸ்லிம்களை அடக்கமுடியாது. முஸ் லிம்கள் பொறுமை உறுதி ஆகியவைகளைத் தாங்கின வர்களாய் வேலைசெய்வார்கள். அல்லாஹுதஆலாவைமட்டும் நம்பினவர்களாய் முற்படுவார்கள். தங்களுக்கு ஜயமும் ஸ்திரமான உறுதியும் அருள வேண்டுமாய் அல்லாஹுதஆலாவைக் கோறுவார்கள். முஸ்லிம்கள் தங்கள் ஈமான், நற்செய்கை ஆகியவைகளின் மூலமாயுள்ள பலத் தைக்கொண்டு பரிசுத்தமான ஆத்மாவின் தைரியத்தைப் பெற்றவர்க ளாய் எதேச் சாதிகாரம் அநியாயம் ஆகியவைகளை ஒழிப்பதற்காக முன்னேறுவார்கள். ஆகவே முஸ்லிம்களின் உலகவாழ்க்கை க்ஷேம மடைவதோடு மறுமையும் உத்தமமானதாக ஏற்பட்டு விடும்.

VI

இயலாமை க்ஷீணதிசை ஆகியவை காரணமாகவே முஸ்லிம்கள் காபர்களின் கட்டுக்குட்படுகின்றூர்கள். முஸ்லிம்கள் அநியாயம், அசத் தியம், குப்ர், எதேச்சாதிகாரம், பாவம் ஆகியவைகளுக்குத் தலை

வணங்கி நிற்கும் நிலைமையில் இவ்வகுப்பார் முன்னேற்றமெய்த இயலாது. அல்லாஹுதஆலாவுக்கு மட்டும் கட்டுப்பட்டு வணங்க முஸ்லிம்கள் கடமைப்பட்டிருக்கின்றார்கள். முஸ்லிம்கள் அல்லாஹுதஆலாவின் உதவியை மட்டும் நம்பி யிருக்கவேண்டும். அல்லாஹுதஆலா மட்டுமே தங்களுக்கு ஆதரவு அளிப்பவனென்று முஸ்லிம்கள் கருத வேண்டும். உலகிலுள்ள அழிந்துபோகும் ஸ்தாபனங்கள் மற்றவர்களுக்கு உதவி புரியலாம். ஆனால் அல்லாஹுதஆலாவைத் தவிர மற்ற எதுவும் முஸ்லிம்களுக்கு நன்மை யளிக்க இயலாது.

இத்தெய்வீக அறிவு, குறிப்பிட்ட காலம், சந்தர்ப்பம் ஆகியவைகளை யொட்டியதல்ல. இவ்வறிவு பொதுவாய் எக்காலத்திற்கும், எல்லா வகுப்பிற்கும் சமமானதாக இருக்கின்றது. இந்நிலைமையில் "உங்கள் கரங்களால் உங்களைக் கேட்டில் போட்டுக்கொள்ளாதீர்கள்" என்னும் திருமறைக்கு இன்று செய்யப்படும் வியாக்கியானமானது முஸ்லிம்களின் எஞ்சிய தைரியத்தையும் பாழ் பண்ணக் கூடியதாக இருக்கிறது,

---

இஸ்லாமும் சுயேச்சையும்.

(295-வது பக்கத்தொடர்)

(இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களெழுதியது,)

" இமாம் " அல்லது " கலீபா "வை பொதுத்தேறுதலின் மூலமாகவே தெரிந்தெடுக்க வேண்டும். இதில் எவருக்கும் மற்றவர்களைக் காட்டினும் அதிக உரிமை இருக்கக் கூடாது.

இவ்விஷயத்தை இரண்டு பாகமாகப் பிரித்துக் கூறுவோம் :—

"குலபாயெராஷிதீன்" களுள் எவரும் எதேச்சாதிகாரமுறை அல்லது வார்சுகிரம பாத்தியதையை ஒட்டி 'கலிபா' வாக நியமிக்கப் படவில்லை என்பதற்குச் சரித்திரம் சாக்ஷியாயிருக்கின்றது. பொது மெம்பர்களென்னும் அந்தஸ்தையுடைய 'முஹாஜிரீன்' கள் 'அன்ஸார்' கள் ஆகியவர்களின் பொதுக் கூட்டத்திலேயே 'குலபாயெ ராஷிதீன்' கள் 'கலீபா' வாகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கின்றனர். "பனூ சாயித்" என்னுமிடத்தில் கூடிய மகாநாட்டில் ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிரேரித்து 'முஹாஜிரீன்' 'அன்ஸார்' ஆகிய இருவகுப்பார்களும் ஆமோதித்துப் பொது முஸ்லிம்களின்

அங்கீகாரத்தைப் பெற்று ஹஜ்ரத் அபூபக்கர்ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிரேரித்து 'முஹாஜிரீன்' 'அன்ஸார்' ஆகிய இருவகுப்பார்களும் ஆமோதித்துப் பொது முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டதன்மேல் ஹஜ்ரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். "அப்துர் ரஹ்மானிப்னு ஔப்" ரலியல்லாஹு அன்ஹு முதலியவர்களடங்கிய ஒரு சிறு கமிட்டியாரால் நியமனஞ் செய்யப்பட்டதோடு மதீனமாநகர வாசிகளான பொதுஜனங்களின் சம்மதத்தையும் பெற்று ஹஜ்ரத் "உதுமான்" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாவாக அமர்ந்தார்கள். மேற்கூறியவாறே மிஸர், மதீனா ஆகிய தேசவாசிகளின் ஆலோசனை அங்கீகாரம் ஆகியவைகளைக் கொண்டு ஹஜ்ரத் "அலீ" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

"பொதுத் தேறுதலின் மூலமாகவே கலீபாவை நியமனம் செய்யக்கூடும். இம்முறையன்றி கலீபாவை நியமிக்க இஸ்லாமில் வேறு வழிகிடையாது" என்று ஹஜ்ரத் உமர்ரலி யல்லாஹு அன்ஹு அவர்கள் தெளிவாய்க் கூறியிருக்கின்றார்கள். (கன்ஸுல் உம்மால் மூன்றாவது வால்யூம் 129வது பக்கம்)

ஹஜ்ரத் 'அலீ' ரலியல்லாஹு அன்ஹுஅவர்கள் ஹஜ்ரத் "முஆவிய்யா" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆகியஇருவரிடமிருந்து கிலாபத்தின் பொறுப்பை எடுத்து விடவும் பொதுஜன அபிப்பிராயத்தையே உதவிக்கழைக்க வேண்டியிருந்தது. ஆனால் ஹஜ்ரத் முஆவிய்யாரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிரதிநிதி மோஸம், சூட்சி ஆகிய கருவிகளைத்தாங்கி ஜனங்களை ஏமாற்றிய வரலாற்றை சரித்திரம் மறந்து விடவில்லை.

ஹஜ்ரத் 'அலீ' ரலியல்லாஹு அன்ஹுஅவர்களின் உத்திரம்.

உங்களை கலீபாவாக நியமித்தது யார்? என்று வினவி ஹஜ்ரத் "முஆவிய்யா" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ரத் "அலீ" ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு 'அலீ' ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விடுத்த விடையாவது:—

"அபூபக்கர், உமர், உதுமான் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியவர்களிடம் எந்த ஜனங்கள் எந்நிபந்தனைகளின் மேல் பைஅத் (பிரமாணம்) செய்தனரோ அந்த ஜனங்கள் அந்நிபந்தனைகளின்மேல் என்

னிடம் 'பைஅத்' செய்திருக்கின்றனர். என்னை (கலீபாவாக) தெரிந்தெடுத்தக் கூட்டத்தில் கலந்திருந்தோர் தங்கள் அபிப்பிராயத்துக்கு விரோதமாய் நடந்துகொள்ள உரிமை பெற்றிருக்கவில்லை. அம்மகா நாட்டிற்கு விஜயம் செய்யாதவர்கள் தாங்கள் விஜயம் செய்யாத காரணத்தை முன்னிட்டு பொதுத் தேறுதலை மறுக்கப் பாத்தியமில்லை. (கலீபாவைத் தேர்ந்தெடுப்பதை யொட்டி) ஆலோசனை கூறும் உரிமை 'முஹாஜிரீன்' களுக்கும் 'அன்ஸார்' களுக்கும் உண்டு. ஆகவே இவர்கள் ஒருமனப்பட்டு யாரையாவது இமாமாகத் தேர்ந்தெடுத்து விட்டால் இது அவர்களின் பொதுச் சம்மதத்தை வெளியிடத் தக்கதாகும். இந்நிலைமையில் 'முஹாஜிரீன்' 'அன்ஸார்' ஆகியவர்களின் ஒருமனப்பட்ட அபிப்பிராயத்தை எவரும் எதிர்க்க அல்லது 'பித்அத்' என்னும் நவீனமுறையைக் கொள்ள வேறுபட்டால் இவ் வேறு பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் கலீபாவை ஒப்புக்கொள்ளும்படிக் கட்டாயப்படுத்த 'கலீபா'வைத் தேர்ந்தெடுத்தவர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். இவ்வுபாயத்தின் மூலமாய் முஹாஜிரீன், அன்ஸார் ஆகியவர்களின் தீர்மானத்திற் குட்படாவிடின், உட்படாதவர் பொது முஸ்லிம்களின் அபிப்பிராயத்தை எதிர்ப்பவரென்னும் குற்றத்தைப் புரிகிறவர்களாதலின் இவர்களோடு (முஸ்லிம்கள்) போர்புரிய வேண்டும்'' என்பதே. 'அலீ' ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இச்சில வாக்கியங்களுக்குள் கிலாபத்து, ஜனநாயக ஆக்ஷி ஆகியவைகளைச் சார்ந்த எல்லா அங்கங்களைப்பற்றியும் மிக உன்னதமான முறையில் விளக்கிக் காட்டிவிட்டார்களென்பதே உண்மையாகும். நாகரீகம் முதிர்ந்த இந்நாட்களில் கூட இதைக் காட்டினும் நல்ல முறையில் இப்பெரும் விஷயத்தை விளக்கிக்காட்ட (எவராலும்) முடியாது

எஜீதின் கிலாபத்தை மறுத்தல்.

முஆவிய்யா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிரதிநிதி மதீனமா நகரில் "எஜீதி"ன் நாமத்தைச் சேர்த்து "குத்பா" ஓதினர். அன்றியும் இஸ்லாமிய சுன்னத்திற்கேற்ப அமீருல் மூமினீன் "எஜீத்" அவர்கள் கலீபாவாகும். என்று கூறியவுடன் ஒரு முஸ்லிம் எழுந்து நின்று அப்பிரதிநிதியை நோக்கி "நீர் பொய்யராயிருக்கின்றீர். இஸ்லாமில் வார்சுகிரம பாத்தியத்திற்கும் எதேச்சாதிகாரத்திற்கும் சம்பந்தமேது? ரோம், பாரஸ் ஆகிய தேயங்களில் அரசர்கள் நியமனமாவதுபோல் எஜீது அரசராக்கப்பட்டாரென்று

கூறும்'' என்று பகிரங்கமாய் அறிவித்தார். இவ்வரலாறு எல்லாச் சரித்திரங்களிலும் வரையப்பட்டும் பிரசித்தியடைந்து மிருக்கிறது.

பொதுத் தேறுதலின் மூலமாய்த் தெரிந்தெடுக்கப்படாதத் தலைவர் முஸ்லிம்களிடை இஸ்லாமிய இமாமாக இருக்க முடியாதென்றும் இத்தகையவர் இஸ்லாமிய "கைஸர்'' இஸ்லாமிய "கிஸ்ரா'' என்றும் கருத வேண்டுமென இவ்வரலாறு கற்பிக்கின்றது.

பொதுத் தேறுதலின் மூலமாய் நியமனமாகாமல் எதேச்சாதிகார முறையில் அரசராகிவிடும் அரசாங்கத்தை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்களின் பிரசித்திபெற்ற ஹதீதில் "அநியாயகரமான அரசாங்க''மென்று பகர்ந்துள்ளார்கள். ஆனதுபற்றியே ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மரணமடையும் தருவாயில் என்மகன் "அப்துல்லாஹ்'' (ரலியல்லாஹு அன்ஹு அவர்களு)க்கு கிலாபத்தில் எவ்வித சம்பந்தமில்லை என்று பகிரங்கமாய் அறிவித்தார்கள்.

பனூஉமையா.

"கிலாபதெராஷிதா'' வுக்குப் பின் பனூஉமையாக்களின் (இஸ்லாம் அங்கீகரிக்க முடியாத) ஆக்ஷி காலம் ஆரம்பமாயிற்று. இக்காலமானது இஸ்லாம் இட்ட அரசாங்கத்தின் அஸ்திவாரத்தைக் குலைத்துவிட்டது. ஆயினும் "பித்அத்'' என்னும் கொடிய காரியங்களை ஒழித்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்திற்குப் புத்துயிரளிப்பதற்காக இவ்வரசாங்கத்தைச் சார்ந்த வகுப்பிலிருந்தே ஹஜ்ரத் உமரிப்னு அப்துல்அஜீஜ் அவர்கள் ஜனனமானார்கள். அக்கெட்ட அரசாங்கத்தின் முறைப்படி சுலைமானிப்னு அப்துல் மலிக் என்னும் அரசர், ஹஜ்ரத் அவர்களை இளவரசராக்கினர். ஆனால் இஸ்லாமிய சட்டப்படி 'கலீபா'வை நியமிப்பதற்கு சுலைமானி புனு அப்துல் மலிக் செய்த காரியம் சொல்லத்தக்கதல்ல. ஆதலின் ஹஜ்ரத் உமரிப்னு அப்துல் அஜீஸ் அவர்கள் முஸ்லிம்களை நோக்கி "ஜனங்களே! இஸ்லாமிய ஒழுங்கிற்கேற்ப முஸ்லிம்களின் பொதுத்தேறுதல், என் சம்மதம் ஆகியவைகளின்றி 'கிலாபத்' என்னும் பொருப்புள்ள சங்கடத்திற்குட்பட்டுவிட்டேன். ஆகவே நீங்கள் என்னிடம் செய்திருக்கின்ற 'பைஅத்' பிரமாணக் கட்டிலிருந்து விடுவித்து விட்டேன். இப்பொழுது நீங்கள் சுயேச்சையுள்ளவர்களா யிருக்கின்றீர்கள். ஆதலின் என்னைத்தவிற வேறுயாரையாவது உங்கள் இமாமாகத் தேர்ந்தெடுத்

துக்கொள்ளுங்கள்.'' என்று மஸ்ஜிதில் பொது ஜனங்களின் முன் பகிரங்கமாய் அறிவித்தார்கள்.

பைஅத் என்பது இஸ்லாமிய அரசாங்கத்தின் ஓர் அங்கமாகும்.

மனிதன் வாலிப திசையை அடைந்த பின்னும் அவன் பழைய தேக நிலை அவனுடைய அங்கங்களில் தோன்றிக் கொண்டிருப்பதைப்போல் இஸ்லாமிய அரசாங்கத்திற்கு உரிமையாயிருந்த லக்ஷணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் மறைந்துகொண்டிருந்தும் அவ்வரசாங்கத்தின் சில அங்கங்களின் வாடை இன்றுவரை இருந்துவருகிறது. இஸ்லாமிய அரசாங்கத்தில் இன்றுவரை நடந்துவரும் "பைஅத்" என்னும் சம்பிரதாயத்தை ஒட்டியே யான் இவ்வார்த்தையைக் கூறினேன். தேசஜனங்கள் அவ் வத்தேசத்தலைவரின் தர்பாரில் குழுமி தங்கள் அரசனின் ஆட்சியை ஒப்புக்கொண்டுவிட்டதாய் வாக்குறுதி செய்வதற்கு "பைஅத்" என்று அறிவிக்கப்படுகின்றது. தலை நகரில் மந்திரிகள், படைத்தலைவர்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள், குல்லாத், அமீர்கள், தேயத்தின் முக்கியஸ்தர்கள் முதலியோர் அரசரின் சமுகத்தில் விஜயம் செய்து அவரின் அரசாங்கத்தை அங்கீகரித்து அவருக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளுவதாய் வாக்குறுதி செய்வதற்கும் "பைஅத்" என்றே கூறுவர். "பனூஉமையா" "பனூஅப்பாசிய்யா" முதலிய எல்லா இஸ்லாமிய அரசாங்கங்களும் "பைஅத்" என்னும் மேற்கூறிய முறையை அனுஷ்டித்து வந்திருக்கின்றன. இந்தியாவிலிருந்து வந்த மொகலாய் ஆக்ஷி, அவ்வாக்ஷி சம்மந்தமான சரித்திரங்கள் ஆகியவைகூட இம்முறையை மெய்ப்பிக்கின்றன. துருக்கி தேயத்தின் ஒவ்வொரு புதிய சுல்தான்களும் சிம்ஹாசனத்தை அடைந்தபின் "பைஅத்" என்னும் பிரமாணம் செய்கின்ற சபையே முதலில் நடைபெறும் தர்பாராகும்.

மார்க்கக் கல்வியிற் சிறந்த 'புகஹா'க்களும், 'முதகல்லிமீன்' என்னு மகான்களும் இமாமத்து, கிலாபத்து, ஆகியவைகளை யொட்டி தீர்மானித்திருக்கின்ற நிபந்தனைகளின் மூலமாயும் கலீபாக்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்கு முறைகள் வெளியாகின்றன வாயினும் இஸ்லாம் மத அறிவிற்சிறந்து விளங்கியஅப்பெரியோர்கள் ஹஜ்ரத், அபூபக்கர், உமர்ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவர் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை மட்டும் அடிப்படையாக வைதுக்கொண்டு கிலாபத்தை யொட்டிய விஷயங்களை வரைந்திருப்பதோடு 'கலீபா'க்கள் தேர்ந்தெடுக்கப்படுவது' பொதுஜன அபிப்

பிராயத்துக்கு மதிப்புக்கொடுப்பது ஆகியவைகள் இஸ்லாமின் அடிப் படைகளென்றும் அம்மகான்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

(1) "தேசத்துள் கல்வி அறிவிற் சிறந்த மகான்கள் கூடி யாரை யாவது (கலீபாவாக) தேர்ந்தெடுப்பது, (2) முந்திய கலீபா ஒருவரை (கலீபாவாக) நியமனஞ்செய்வது ஆகிய இவ்விருவகையினுலும் கிலா பத்து ஸ்திரமாகும்" என்று ஹிஜ்ரீ 405 ல் வபாத்தான "காஜீமா வர்தீ" அவர்கள் வரைந்திருக்கின்றார்கள்.

"கிலாபத்து ஸ்திரமாவதற்குள்ள முறைகளில் ஒன்று :—

தலைவர்கள், உலகமாக்கள், தேசத்துள் சிறந்தவர்கள் முதலிய பெரியோர் ஒருவரை கலீபாவாக அங்கிகரித்து அவரிடம் 'பைஅத்' துச் செய்வதாகும்" என்று அல்லாமாதப்தாஜானீ அவர்கள் "ஷரஹ்மகாஸிதி"ல் வரைந்திருக்கிறார்கள்.

"'ரஸூல்' அல்லது முந்திய 'கலீபா' யாரையாவது (கிலாபத் திற்காக) நியமனஞ் செய்வது, தேசத்துள்ளிருக்கும் கல்வியிற்சிறந்த முக்கியஸ்தர்கள் யாரிடமாவது 'பைஅத்' செய்வது ஆகியவைகளின் மூலமாய் 'கிலாபத்து ஸ்திரமாகும். "சுன்னத் ஜமாஅத்து" "முஃதஜிலா" "ஸலாஹிய்யா" "ஜைதிய்யா" ஆகிய நான்கு வகுப் பாரிடமும் இம்முறைகளின் படியே கிலாபத் ஸ்திரமாகின்றது" என்று காஜீ அள்துத் தீனும் ஸையித் ஸனதும், சுன்னத்து ஜமாஅத் தாரிடம் சிறப்புற்ற "மவாகிப்" "ஷரஹ்மவாகிப்" ஆகியவைகளில் வரைந்திருக்கிறார்கள்.

இதே கிதாபின் மற்றோரிடத்தில் வரையப்பட்டிருப்பதாவது:—

"இஸ்லாமிய முன்னேற்றம் இஸ்லாமிய நன்மை ஆகியவைகளை முன்னிட்டு கலீபாவைத் தேர்ந்தெடுக்க முஸ்லிம்களுக்குள்ள உரி மையைப்போலவே இஸ்லாமிய லக்ஷியங்களுக்குக் கேடாக இருந்து வரும் கலீபாவை நீக்கிவிடவும் முஸ்லிம்களுக் குரிமையுண்டு. கலீ பாவை நீக்குவதால் அமைதியின்மையும் குழப்பமும் ஏற்படுவதாயின், இந்த 'கலீபா'வின் மூலமாய் நிகழும் கெடுதி, இவரை நீக்கு வதால் உண்டாகும் நஷ்டம் ஆகிய இரண்டிலும் குறைந்த சங்க டத்தை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்" என்பதே.

இஸ்லாமிய ஆக்ஷிமுறையும் "அகாயித்" என்னும் இஸ்லாமிய கோள்கை சம்பந்தமான இற்றைய கிரந்தங்களும்.

இஸ்லாமிய கொள்கை சம்மந்தமான கிரந்தங்களை இயற்றிய மகான்களும், "முத்தகல்லிமீன்" என்னும் பெரியார்களும் இஸ்லா

மிய ஆக்ஷிமுறையை யொட்டி வரைந்திருப்பவைகளைப் பொருத்து நீண்டவிவாதம் செய்துகொண்டுபோக இப்பொழுது அவகாசமில்லை. ஆயினும் சிற்சில குறிப்புகளை எடுத்துக் காட்டுவது அவசியமா யிருக் கின்றது.

'அகாயித்' என்னும் இஸ்லாமிய கொள்கை சம்பந்தமான கிரந் தங்களில் முஸ்லிம் பொதுஜன அபிப்பிராயம், இமாமைத் தேர்ந்தெ டுப்பது ஆகியவைகள் ஒருவாறு எடுத்துக் காட்டப்பட் டிருப்பதோடு குறிப்பிட்ட நபருக்கு அதிக உரிமை கிடையாதென்பதையும் தெளி வாய் வரையப்பட்டிருக்கின்றது. மேலும் இக்கிரந்தங்களில் வரையப் பட்டுள்ள விஷயங்கள் இஸ்லாமிய ஆக்ஷிமுறையை உண்மையாகவே எடுத்துக் காட்டக்கூடிய தாகவில்லாமல் இக்கிரந்தங்கள் அநேகமாய் கக்ஷிபிரிவினையைச் சார்ந்ததாயும் 'கிலாபதே ராஷிதா' என்னும் அரிய ஆக்ஷிமுறையை உறுதி செய்வதாயு மிருப்பதோடு முஸ்லிம்க ளின் கூட்டுறவு இஸ்லாமிய ஜனநாயக ஆக்ஷி ஆகியவைகளை யொட்டி யும் பலவற்றைக் கூறுகின்றன. ஆனால் இஸ்லாமிய ஆக்ஷிமுறை, இஸ் லாமிய ஜனநாயக அடிப்படை ஆகியவைகளுக்கு எத்தகைய கௌர வம் கொடுத்து விரிவாய் போதிய வியாக்கியானத்தோடு இஸ் லாமின் கொள்கை சம்பந்தமான கிரந்தங் களிலும் மற்றய கிரந்தங்களிலும் வரையப்பட்டிருக்க வேண்டுமோ அவ்வாறு வரையப்படவில்லை யென்பது திண்ணம். இஸ்லாமைக் காப்ப தற்குரிய அரசாங்கத்தின் அடிப்படையைப் பொறுத்து கவனம் செலுத்தப் பட்டிருக்க வேண்டிய அளவை ஞாபகத்திலிறுத்திக் கொண்டு நம் பெரியார்கள் வரைந்திருப்பனவற்றை நோக்குவோ மாயின் விசனம் பொங்கி அம்மகான்கள் இவ்வபாரமான விஷயத் தைப் போதியவளவு தெளிவாய் வரையவில்லை என்று கூறத் தயங்க மாட்டோம். இஸ்லாமிய ஆக்ஷி சம்பந்தமான ஒழுங்கு முறைகளை நம் பெரியார்கள் கவனிக்காமல் அலக்ஷியஞ் செய்து விட்டார் கள் என்று கூறும்போது நமக்குப் பெரும் சஞ்சலத்தைத் தரு கின்றது.

மதக் கல்வியிற் சிறந்த உத்தமர்களாகிய மகான்கள் இஸ்லா மிய ராஜீய அமைப்பைப்பற்றி அநேகமாய் அலக்ஷியம் செய்து விட்ட காரணத்தால் இஸ்லாம் முக்கியமாய்க் கொண்ட ஆக்ஷி முறையை யொட்டிய ஏற்பாடுகள் பலம் குன்றிப் போவது ஏற்கத்தகாததாகும். இஸ்லாமைச் சார்ந்த எண்ணிறந்த நற்காரியங்கள் நசித்துவிட்ட தைப் போலவே முக்கியமான இஸ்லாமிய ராஜீய அமைப்புச்சம்பந்த

மான காரியத்தையும் பனீஉமையாக்களின் எதேச்சாதிகார ஆக்ஷியின் அதிகாரம் செல்வாக்கு ஆகியவைகள் பாழாக்கி விட்டன.

பனீஉமையாக்களின் செல்வாக்கு நம்முடைய ஒவ்வொரு கலை ஞானத்தையும் வாதித்திருக்கின்றது. நம் ஊழ்வினையின் பயனாக நம்மதக் கொள்கை மதச்செய்கை ஆகியவைகளைச் சார்ந்த பல எல்லையிலிருந்தும் பனீ உமையாக்களின் ஆக்ஷியினால் உண்டான தீயவாடை இன்றளவும் வீசிக்கொண்டிருக்கிறது. இஸ்லாமிய அரசாங்கத்தின் அமைப்பைக் குலைத்து "கிலாபதேரா ஷிதா" என்னும் உண்மையான ஜனநாயக ஆக்ஷிக்குப் பதிலாய் எதேச்சாதிகார கொடிய அரசாங்கத்திற்கு அடிகோலியதே "பனீஉமையா"க்கள் இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் புரிந்த முதலாவது அநியாயமாகும். இவ்வநியாயமே பனீ உமையாக்கள் நிகழ்த்திய "பித்அத்" என்னும் ஆரம்பத் தீச்செயலாகும். இஸ்லாமிய அரசாங்கத்தை யொழித்து எதேச்சாதிகார ஆக்ஷியை ஸ்தாபித்த மாறுதல் மிகப் பெரியதாகும். இம்மாறுதலை யுண்டுபண்ணிய காலத்தில் கீர்த்திவாய்ந்த சஹாபாக்களும் ஜீவித்திருந்தனர். "கிலாபதே ராஷிதா"வின் நற்செய்கைகளை ஒவ்வொரு குழந்தையும் உச்சரிக்கும் காலமாக யிருந்தது. ஆகவே இந்நாளில் பனீஉமையாக்கள் உண்டுபண்ணிய மாறுதலை தேயம் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்வது கஷ்டமான காரியமாக விருந்தது. பனீஉமையாக்களின் இக்கொடிய ஆக்ஷியை தேசம் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்வதற்கு ஜனங்களின் இஸ்லாமிய உணர்ச்சியை யழிக்க பனீஉமையாக்கள் வாளாயுதம் தாங்க வேண்டியதாயிற்று. இஸ்லாமிய ஆக்ஷியின் நன்மையை எடுத்துக் காட்டி பனீ உமையாக்கள் புரியும் ஆக்ஷியைச் சார்ந்த தீமையை உரைக்கும் நாக்களை அம்புகளால் அடக்கப்பட்டன. காலம் செல்லச் செல்ல இஸ்லாம் உண்டுபண்ணியிருந்த அரிய உணர்ச்சியில் மாறுதலேற்பட்டு ஜனங்களின் எண்ணம் ஒருவாறு திரும்பத் தலைப்பட்டது. பனீ உமையாக்களின் இவ்வடாத காரியமானது உண்மையைத் திரை போட்டு மூடிவிட்டது.

"பனீஉமையா"க்களுக்குப் பின் "பனீஅப்பாஸியா"வின் ஆக்ஷி தோன்றிற்று. பனீஅப்பாஸியாக்களும் பனீஉமையாக்கள் புரிந்த அடாத காரியங்களையே பின்பற்றி யிருந்தனர். அப்பாஸியாக்களின் ஆக்ஷிகாலத்தில் இஸ்லாமிய கல்வி அபிவிருத்தியடைந்து எண்ணிறந்த கிரந்தங்கள் இயற்றப்பட்டனவாயினும் அவைகளுள்ளும் அவ்வாக்ஷியின் விகாரமான செல்வாக்கு மறைந்திருந்து

கொண்டு வேலையை நடத்தியது. இவர்கள் 'கிலாபத்' 'இமாமத்' ஆகிய பதவிகளைப் பெறுவதற்குப் பாவமான கருமங்களையும் விலக்கப் பட்டவைகளையும் புரிவதுகூட குற்றமல்லவெனக் கருதினர். இவ் வெண்ணம் குர் ஆன் ஷரீபு ஹதீதுஷரீபு ஆகியவைகளைச் சார்ந்த தாகுமா ?

அப்பாஸியாக்கள் இயற்றியகலை ஞானங்கள் எஜீத், வலீத் ஆகியவர்களின் கிலாபத்தைக்கூட முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளும்படி தூண்டக் கூடியனவாக இருக்கவில்லையா ?

கல்வியிற் சிறந்தவர்களின் ஆலோசனை, பொதுத்தேறுதல் ஆகி யவைகளின் மூலமாய் கலீபாக்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று அறிவிப்பதோடு முந்திய கலீபா ஒருவரை கலீபாவாக நியமனஞ் செய்வதும் ஒரு வழியிற் செல்லத்தக்கதென்று நிரூபித்திருப்பதை மேலேவரையப்பட்ட வியாசங்களிற் கண்ணுேக்குற்றிருக்கலாம். முந்திய கலீபா தனக்குப்பின் ஒருவர் கலீபாவாக யிருக்க நியமனஞ் செய்வது சரியென்று மெய்ப்பிக்க ஹஜ்ரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் நியமனஞ் செய்யப்பட்ட தாகமட்டும் வைத்துக்கொன்டனர். உண்மையை யுணரப்புகின் ஹஜ் ரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிரேரித்து, பிரேரித்த தோடு மட்டு மின்றி இப்பிரேரணையை கல்வி அறிவு முதலியவைகளிர் சிறந்தப் பேரியோர்களும் பொதுமக்களும் மனப்பூர்வமாய் அங்கீகரித் துத் தங்களின் அங்கீகாரத்தை வெளியிட்டு மிருக்கின்றனர். ஆகவே உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூபக்கர் ஸித்தீக் ரலியல் லாஹு அன்ஹு அவர்களால் நியமனஞ் செய்யப்பட்டவர்களென்று கூறுவதற்குப் பதிலாய் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பொது ஜனங்களின் மூலமாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்திதியை யடைந்து விட்டார்களெனப் பகரவேண்டி யிருக்கிறது.

ஹஜ்ரத் உமரிபுனு அப்துல் அஜீஜ் அவர்கள் முந்திய கலீபாவி ஞல் கலீபாவாக நியமனஞ் செய்யப்பட்டிருந்தும் ஹஜ்ரத் அவர்கள் "இஸ்லாமிய ஒழுங்கிற் கேற்ப முஸ்லிம்களின் பொதுத் தேறுதலைக் கொண்டு தாம் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை. ஆதலின் வேறுயாரையாவது உங்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுத்துக் கொள் ளுங்க" ளென்று மஸ்ஜிதில் பொது ஜனங்களின் முன் கூறியதையும் குலபாயெராஷிதீன்கள் கலீபாக்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட வர லாற்றையும் உண்மையாகவே உணருவோமாயின் பொதுத்தேறுத

லன்றி வேறு வழியில் கலீபாவையோ அல்லது கலீபாவுக்குப் பின் வரவேண்டிய (இளவரசர்) கலீபாவையோ நியமனஞ் செய்ய இஸ்லாம் இடந்தரவில்லை என்னும் முடிவுக்கு வருவோம். ஆகவே இஸ்லாமிய 'கிலாபத்' 'இமாமத்' ஆகியவைகளுக் கவசியமும் அஸ்தி வாரமுமான பொதுத் தேறுதலை அலக்ஷியம் செய்யப் பட்டிருக்கும் நிலைமையில் கலீபாவுக்கும் இமாமுக்கும் வேண்டிய அந்தஸ்து, லக்ஷணம் முதலிய நிபந்தனைகளை 'அகாயித்' என்னும் இஸ்லாமிய கொள்கை சம்பந்த மான கிரந்தங்களின் வரையவேண்டிய அவசிய முண்டா?

இமாமியா வென்னும் வகுப்பார் கிலாபத்திற்குப் பொதுத் தேறுதல் வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள வில்லையாயினும் அவ் வகுப்பைச் சார்ந்த "ஜாரூதியா," "ஜைதியா" ஆகிய பிரிவுகள் "ஹஸன்" "ஹுஸைன்" ரலியல்லாஹு அன்ஹுமா ஆகியவர்க ளின் சந்ததியாரே இமாமத்திற்கும், கிலாபத்திற்கும் உரியவர்க ளெனத் தீர்மானித்து அச்சந்ததியார், கூடி ஒருவரை 'கலீபா'வாகத் தேர்ந் தெடுக்க வேண்டுமென்றே கூறுகிறது.

மேலே வரையப்பட்டிருக்கும் விஷயங்களைக் கண்ணுற்ற பின் எவரும் ஜன நாயக ஆக்ஷிக்குப் பேரங்கமானப் பொதுத் தேறுதல் இஸ்லாமில் கிடையாதென்று கூறவும் துணிவரோ? (தொடரும்)

சிறப்புற்ற மக்கமா நகரின் கடிதம்

'கிலாபத்' என்னும் பத்திரிகையின் 26—11—25. வெளியீட்டில் மக்கா வாசிகள் ரபீ உல் அவ்வல்மீ 12உ எழுதிய ஒரு கடிதம் பிர சுரமாகி இருக்கிறது; அக்கடிதத்தின் முக்கியமான பாகம் வரு மாறு:—

......................நாங்கள் விளைத்தக் கெடுதிகளுக்குப் பரிசுத்த மான அல்லாஹுத ஆலா சிறிதளவே சிக்ஷை விதித்திருக்கின்றான். நாங்கள் அனுபவிக்கும் கஷ்டத்திற்குக் காரணம் எங்கள் பாபமே அன்றி வேறில்லை. மக்கமா நகரவாசிகளின் கேவல நிலைமை சொல் லத் தரமற்றிருக்கின்றது. நாங்கள் இவ்விழிய நிலைமையில் மரண மடைவோமாயின் உலக முஸ்லிம்கள் பெரும்பாவத்தைப் புரிந்தவர் களாக மாட்டார்களா? ஏனெனின் மக்கா வாசிகளுக் குதவி புரிவது இஸ்லாம் உலகத்தின் 'பர்லேகிபாயா' என்னும் கடமை யல்லவா? ....ஹிஜ்ரீ 34 ஷஃபான் மீ 9உ 'ஹரம்' என்னும்

பரிசுத்த ஸ்தலத்தின் மரியாதையைக் கெடுத்த குற்றத்திற்காக நாங்கள் பெருங் கஷ்டத்தில் சிக்குண்டிருக்கின்றோம்.

(இத்தேதியில் ஹரம் என்னும் பரிசுத்த ஸ்தலத்தில் துருக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கிலாபத்)

"அஹ்லெஹதீது" என்னும் வகுப்பார் நாற்பது ஐம்பது ஆயிரம் ரூபாய் அனுப்பினார்கள். அத்தொகை மக்காவாசிகளுக்கு அவ்வமயமே வினியோகம் செய்யப்பட்டது. ஆனால் இங்கு எளியவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்நிலைமையில் அத்தொகையின் மூலமாய் எல்லோரையும் பரிபாலிக்க எங்ஙனம் சாத்தியமாகும்? நாளொன்றுக்கு சராசரி 3000, எளியவர்கள் தரும ஸ்தாபனங்களை யடைகின்றனர். இவர்களுள் எண்ணிறந்தவர்கள் எதையும் உண்ணாதவர்களாய் இராக்காலங்களில் உறங்குகின்றனர். "அல்ஹிலால்" பிரசுரமாய்க் கொண்டிருந்த காலை 'அல்லாஹுத ஆலாவுக்கு உதவி புரிகிறவர்களுண்டா?' என்று மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் வரைந்து விட்டு, நீண்ட காலம் கழிந்த பின் "நான் வினவியது பாலை வனத்திலிட்ட உபயோகமற்ற சப்தமாயிற்று" என்று வரைந்திருந்ததைப் போலவே எங்கள் சப்தமும் பாலை வனத்திலிட்ட உபயோகமற்ற சப்தமாகவே யிருந்து வருகிறது.

ஏழமையும் பசிப்பிணியும் அபரிமிதமாய்க் கொண்டிருக்கிறது. நேற்றுவரை செலவுக்குப் பொருள் வைத்திருந்தோர் இன்று எளியவராயும் இன்று செலவுக்கு வைத்திருப்போர் நாளை எளியவராயும் போகின்றனர். "அல்லாஹுத ஆலாவைத் தவிற வேறு யாராலும் சாத்தியமாகாது" என்பதுபோல் எதிர்பாராத இரகசியஉதவி ஏதேனும் உண்டாகாதவரை மக்காவாசிகள் பெருஞ்சோதனைக்குரிய நிலைமையை அடைந்துவிடுவார்கள்.

"பைத்துல்லாஹ்" என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தை யண்டியிருக்கும் மக்காவசிகளின் கஷ்ட நிஷ்டூரங்களை நிவர்த்திப்பதற்கு சொல், செயல் ஆகியவைகளாற் உதவி புரிவதை யொட்டிய சிந்தனை இன்று இந்தியாவில் அரிதாக இருக்கிறது. ஆனால் சென்றுபோன அரசாங்கம் நல்லதென்று சிலரும் இற்றய அரசாங்கம் தயை நிறைந்ததென்று சிலரும் கூறுவதிலேயே (இந்திய முஸ்லிம்கள்) காலத்தைக் கழிக்கின்றனர். "பரிசுத்தமான ஹிருதயங்களை அல்லாஹுத ஆலாவுக்குச் சமர்ப்பிப்பவர்களைத்தவிற (மற்றோருக்கு) பொருள், பிள்ளை ஆகியவைகள் நன்மையளிக்க முடியாதநாள்" என்று எத்தினத்தைக்

குறித்து அல்லாஹுதஆலா கூறியிருக்கின்றனே? அத்தினத்திற்பய னடையக் கருதுவீர்களாயின் இந்நெருக்கடியான காலத்தில் தைரிய மாய் எழுந்து நின்று எங்களுக்கு உதவி புரியும்படி அல்லாஹுத ஆலாவை முன்னிட்டுக் கோருகிறோம்.. இன்று எங்களிலொருவருக்கு உதவி புரிவீர்களாயின் நாளை அல்லா ஹுத ஆலாவின் மூலமாய் உங்களுக்குப் பெரும் நற்கூலி கிடைக்கும். எங்களை ஒதுக்கிவிட்டு மற்றையோருக்கு நீங்கள் தருமஞ்செய்வீர் களாயினும் பிறகு சஞ்சலமடைவீர்கள். தருமஞ்செய்வதற்கேற்ற நேரம் இதுவே. இந்நேரத்தைக் கைநழுக விட்டுவிட்டீர்களாயின் நாளைக்குக் கவலைப்படுவீர்கள். இந்நெருக்கடியான வேளையில் அல க்ஷியமாக இருந்துவிட்டு பிறகு நீங்கள் செய்யும் தருமத்தால் பல னடைய முடியாது. மரணமடைந்த பின் நற்காரியங்கள் மட்டுமே உதவிபுரியும் பாவமான கருமங்களாற் சிக்ஷையை அனுபவிக்க வேண் டியதாயிருக்கும். "அலீ" அல்லது "ஸஊத்" ஆகியவர்களிடத்தில் சிநேகம் அல்லது பகை ஆகியவைகளால் எப்பலனும் கிட்டாது........

முஸ்லிம் சகோதர சகோதரிகளே! நீங்கள் வருடந்தோறும் ஜகாத் கொடுக்க கடமைப்பட்டிருக்கவில்லையா? சந்தேகமின்றி அல்லா ஹுத ஆலாவின்பேரிலும் கூலிகொடுக்கும் நாளின்பேரிலும் உறுதி யுள்ள முஸ்லிம்கள் தங்கள் மீதுகடமையாயுள்ள ஜகாத்தைக்கொடுத்து வருகிறார்களென்பதுண்மையே. அத்தொகையின் இரண்டில் அல் லது மூன்றில் ஒரு பாகத்தையாவது மக்கா வாசிகளுக்கு அனுப்பு வீர்களானல் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் நற்கூலியை அதிக மாய்ப் பெறுவீர்களலல்லவா? சிறப்புற்ற மக்கமா நகரில் தருமஞ்செய் வதற்கான இனங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் எதிலாவது தங்களிஷ்டம்போல் விநியோகம் செய்யலாம்...........................

குறிப்பு:—

மக்கா வாசிகளின் கஷ்டத்தை மேற்கண்ட கடிதத்தின் மூல மாய் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். மதீனா வாசிகளும் பெருங் கஷ்டத்திற்குட்பட்டிருப்பதாய் செய்திகள் வந்து கொண்டிருக்கின் றன. 18,000-ஜனங்கள் ஷரீபுடைய சைனியத்தின் அக்கிரமத்தால் மதீனாவைவிட்டு வெளியேறி "ராபிகு" க்கு வந்திருக்கின்றனர். இவர் களுக்கு அமீர் "இப்னுஸஊத்" அவர்கள் கூடியவரை உதவி புரி ந்துவருவதாக அறிகிறோம். ராபகில் அநாதைகளாயிருந்துவரும் அம்முஸ்லிம்கள் குறிப்பாய் இந்திய முஸ்லிம்களின் உதவியைக் கோருகின்றனர். இந்நிலைமையில் இந்திய முஸ்லிம்களுள் பணக்

காரர்களாயிருப்போர் நாள் தவறாமல் கந்தூரி என்னும் விருந்திடுவ தில் பொருளை வியர்த்தமாக்கி வருகின்றனர். ஆனால் இனியேனும் மக்கா, மதீனா, மராக்கோ, ஷாம், பலஸ்தீன் முதலிய தேச முஸ்லிம் களுக்குதவிபுரிய வேண்டிய கடமையை அறிந்து உதவி செய்ய முன் வர மாட்டார்களா?

ஓர் அநாமதேயக் கடிதம்.

எமக்கொரு கடிதம் வந்திருக்கிறது. இதனடியிற் பிரசுரித் திருக்கிறோம். அக்கடிதத்தில் கடித மெழுதியவரின் கை யொப்பமாவது பெயராவது காணப்படவில்லை. "எழுதியவர் பெயரில்லாத அநாமதேயக் கடிதம் நல்ல விஷயங்களைக் கொண்டி ராது போயின் குப்பைத் தொட்டியே அதற்குத்தக்க இடமாகும்" என்று மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அடிவர்கள் அல்ஹிலால் மூன் றாவது வால்யூம் 414-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள். ஆதலின் தம் பெயரை வெளியிட்டுக் கடித மெழுதுவதற்குத் தைரிய மில்லாத வர் வரைந்துள்ள நிருபத்தைப் பற்றி கவனஞ் செலுத்த வேண்டிய தில்லையென்று அக்கடிதத்தை முதன் முதல் கண்ணுற்றபோது யாம் கருதியதுண்மையே. ஆனால் மேற்கூறிய காரணத்தின் ஒரு விதத்திரையால் நான் புரியும் கெடுதிகளை மறைத்துக்கொள்ள என் கெட்ட 'நப்ஸ்' என்னைத் தூண்டக் கூடுமல்லவா?

முஸ்லிம்களுக்குத் தீமை யுண்டாகும் முறையில் "அல்கலாம்" நடந்து வருவதாக அநாமதேயக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதால், வேறு நல்ல விஷயங்களைப் பிரசுரிக்கக் கூடிய அல்கலாமின் சில பக் கங்களை அக்கடிதத்திற்காகவும் அதை யொட்டிய குறிப்பிற்காகவும் செலவிடத் துணிந்தேன். அல்கலாமைப் புகழ்ந்து எழுதப்படுங் கடிதங்களைப் பிரசுரிக்காவிடினும் அதை இகழ்வதற்காகத் தோன்றும் அநாமதேயக் கடிதத்தைக்கூட பிரசுரிக்காமலிருக்க யான் இஷ்டப்பட வில்லை. கோபத்திற்கிரையாகி விட்ட மனிதன் தன்னை மறந்து துர் பாஷையை கையாளுவது இயல்பே. ஆதலின் அநாமதேயக் கடித மெழுதிய அஹமதியா நண்பர் கோபம் மிகைத்துத் தம் கடிதத்தில் கையாண்டிருக்கும் அளவிறந்த துர்பாஷையான பதங்களை நாம் கூடிய வரை பொருட் பண்ணாதிருக்கலாம்.

அநாமதேயக்கடிதம் "11—10—25 கொழும்பு" என்று ஆரம் பித்து "இங்ஙனம் ஒரு சந்தாநேயர் 11—10—25" என்று முடிக்கப்

பட்டிருக்கிறது. 10—10—25ல் வெளியான 10, 11 இலக்க "அல்க லாம்" 383, வது பக்கத்தில் அஹமதிய பிரசாரத்தைக் கண்டித் தெழுதிய ஒரு கடிதம் பிரசுரமாயிருக்கிறது. இஃது அநாம தேயக் கடிதமெழுதிய வகுப்பாருக்குப் பெரும் கோபத்தை மூட்டி விட்டதிலாச்சரிய மொன்று மில்லை. ஆனால் 10வ வெளியான பத்திரிகையை வாசித்து விட்டு 11வ கொழும்பிலிருந்து கொண்டு இக்கடிதத்தை எழுதியது ஆச்சரிய மல்லவா? அந்தப்புரத் திலிருந்து கொண்டு அநாமதேயக் கடித மெழுதும் நண்பர் அல்கலாமின் சந்தாதாரரென்றும், ஆரம்பமுதல் அல்கலாமை வாசித்து வருவதாகவும், அது முதல் இதுவரை அல்கலாமில் ஒரு நல்ல வியாசமாவது பிரசுரமாகவில்லை யென்றும் தம் கடிதத்தில் வரைந்திருக்கிறார். இது சம்பந்தமாய் அல்கலாமை வாசிப்பவர்கள் ஒருநல்ல தீர்மானத்தைச் செய்வார்களென்று நம்புகிறேன்.

சுன்னத்து ஜமாத்துக்களின் கொள்கைக்கு முறணான வெண் ணம், செய்கை ஆகியவைகளை என்னால் கூடியவரையில் கண்டிக்காமலி ருப்பதில்லை. சுன்னத்து ஜமாத்துக்களின் கொள்கைக் கேற்ப நியாய மான முறையைக் கொண்ட என்கண்டனத்தை சுன்னத்து ஜமாத்தைச் சாராத எல்லோரும் அங்கீகரித்துக் கொள்வார்களென யாம் எத்தரு ணமும் எதிர்பார்த்ததில்லை. யான் குற்றமற்றவனென்றுகூற எச் சந்தர்ப்பத்திலும் துணியேன். அன்றியும் என் தவறை எடுத்துக் காட்டி என்னைச் சீர்திருத்துவதற்காக முயலும் எழுதுகோலை முத்த மிடத் தயாராயிருக்கின்றேன். இந்நிலைமையில் துப்பாக்கி பீரங்கி முதலிய கருவிகளை வைத்துக் கொள்ள சுதந்தர மில்லாத சக்தியற்ற ஒரு பகீராகிய எனக்குக் கடிதமெழுத முன் வருகிறவர்கள் தாங்கள் பெயரை வெளியிடக்கூட தைரிய மிழந்திருப்பதேனோ?

அஹ்மதிய பிரசாரத்தைக் கண்டிக்கும் சுன்னத்து ஜமா அத்து முஸ்லிம்கள் தற்கொலைபுரிந்துகொள்ளும்படிச்செய்ய அஹ்மதியாக்கள் மறைத்து வைத்திருப்பதாக அறிவித்து வரும் பீரங்கி அநாமதேயக் கடிதமேயாயின், இத்தகைய கடிதங்களில் வரையப்படும் விஷயப் பொருத்தமற்ற ஒவ்வொரு பதத்தையும் நியாயமுறையில் கண்டிக்க இன்ஷா அல்லாஹுதஆலா தயாராயிருக்கிறோம்.

ஒருபத்திரிகாசிரியர், ஒரு பட்டதாரி, ஒரு பதக்கம் பெற்ற வர் முதலிய அஹ்மதியாக்களை சுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்கள் தாக்ஷண்யமின்றி பகிரங்கமாய்க் கண்டித்து வரும் நிலைமையில் அஹ் மதியாவகுப்பைச் சார்ந்தோர் தங்கள் பெயரை வெளியிட்டுக் கடித

மெழுதக் கூடமுடியாது போதற்குக் காரணம் அவர்களின் பேடித் தனமா?

மேற்கூறப்பட்டுள்ள அநாமதேயக் கடிதமாவது:—

கொழும்பு, 11—10—25.

அல்லாகுத்த ஆலா நற்கிருபை செய்வானாக. கனம் அல்கலாம் பத்திராதிபர் அவர்களுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும். தங்களின் சஞ்சிகை தோன்றிய காலமுதல் நானும் சந்தாதரனாய்ச் சேர்ந்து பத்திரிகை படித்து வருகின்றேன். அதில் எப்பொழுதும் பிரஷ்தூஷணமும் பொறுமையும் நிறைந்து பலவிதத்தும் முஸ்லிம்களைக் காபிராக்கக் கூடியதும் சமூகம் பிளவுபடக்கூடியதுமான அநேக மனிதக் குணமற்ற வியாசங்களே மலிந்து மனதை அருவருப்புக் கொள்ளச் செய்கின்றதைத் தவிர்த்து மானிடர்கள் உய்வடையும் பொருட்டு ஒரு நல்லவியாசமாவது அறிவாளிகளின் வியாசமாவது வந்ததாய்த் தெரியவில்லை. இதைக்குறித்துப் பலதடவைகளில் தங்களுக் கெழுதலாமென்றெண்ணினேன். திரும்பவும் ஒரு பத்திரிகை வைத்து நடத்தக்கூடிய தங்களுக்கு நாமெழுதுவது சரியில்லை என்றும் இன்னும் கொஞ்சகாலம் பொருமையுடனிருப்போமென்று நிறுத்தினேன். திரும்பத் திரும்ப தங்களின் அறியாமையையும் குறுகிய நோக்கமும் அறிவிலிகளின் வீண் செய்திகளடங்கிய வியாசங்களையும் கண்டு மனந் தாளாமல் இதை எழுதியிருக்கின்றேன். எனவே தாங்கள் கடிந்து கொள்ளாமல் தங்களால் உலகில் ஏற்படும் சமூகக் குலைவையும் குழப்பத்தையும் சிந்தித்துத் தவிர்ந்து கொள்ளுங்கள்.

பொதுவாய் உலகில் பத்திரிக்கைபார்ப்பதால் ஜனங்களுக்கு அறிவுவிருத்தியாவதோடு மனதில் சமாதானமும் ஒற்றுமையும் தரிபடவேண்டும். இதற்காகவே ஒவ்வொரு புண்ணிய புருஷர்கள் பத்திரிகை நடத்துவதும், ஒவ்வொரு பாமர ஜனங்கள் அதை ஆதரிப்பதும். நிற்க தங்களுடைய பத்திரிகையோ இதற்கு நேர் மாற்றமாக அறிவு மழுங்குகிறதுடன் மனதில் சமாதான மென்றதே இல்லாமல் முஸ்லிம்களைப் பகைக்கவும் தங்கள் பத்திரிகை தூண்டுகிறது. உதாரணமாகத் தங்கள் பத்திரிகையில் கொஞ்சமும் மனிதக் குணமின்றி பிறரை யேசியும் பேசியும் முஸ்லிம்களைக் காபிரென்றும் புத்திக்கு சற்றும் பொருந்தாமல் குறுகிய நோக்கமாயும் அறிவீனமாயும் எழுதுவதால் அதைப்படித்த ஒவ்வொரு நண்பர்களும் அதே தங்கள் மனதில் குடிகொண்டவர்களாய் (சொன்னதைச் சொல்லும்

கிளிப்பிள்ளை) பிறரைத் தூஷித்துத் தாருமாறாய் சுத்தக் கேவலமாய் தங்கள் பத்திரிக்கைக்கே வியாச மெழுதுகிறார்கள். அதைத் தாங்கள் பத்திரிகாதருமமென்றதே இல்லாத பொறுமைக் குணத்தால் அப்படியே பிரசுரித்து விடுகின்றீர்கள். இவ்வித அறிவிலிகளின் வியாசங்களே தங்கள் பத்திரிகையை நிறப்புகிறதைத் தவிர்த்து ஒரு காலத்திலாவது அறிவாளிகளின் வியாசம் வரவில்லை. காரணம் தாங்கள் யோக்கியமான முறையில் பத்திரிகை நடத்தினாலன்றோ நல்லோர்களால் விஷயதானஞ் செய்யப்படும். இதைத் தவிர்த்து தாங்கள் சுத்த அயோக்கியமான முறையில் பத்திரிகை நடத்துவதினாலேயே அத்தகைய மனிதர்களால் வரையப்படும். மனிதர் கண்கொண்டு பார்க்கவும் நாவெடுத்து வாசிக்கவும் நல்லோர்களிடத்தில் காட்டவும் அசிகை கொண்டவியாசங்களை நிறப்பிக்கொண்டு பிரதிமாதமும் மனிதர்களின் அறிவைக்களுந் தாக்குவதற்காக வந்துகொண்டிருக்கிறது. தங்கள் பத்திரிகையைப் பார்ப்பவர்களில் அநேகருக்கு மனிதர்களுடன் மனித குணமாய்ப் பேசவும் தெரியாமல் தங்களின் மூட எழுத்தைப் பின்பற்றிப்பேசி மனிதர்களுடன் குளப்பத்திற்குப் போகிறார்கள்.

இதுகளுக்கெல்லாம் காரணம் தாங்கள்தான். இப்படிப் பலவிதமாய்த் தங்கள் பத்திரிகை மூலியம் முஸ்லிம் சமூகம் பிளவுபட்டு உள்ள அறிவையும் இளந்து அறியாமையே உலகில் குடிகொள்கின்றன எனவே, நான் மேலே எழுதியது கொண்டு வருந்தாமல் தங்களின் குற்றங்களை நீக்கி பிர தூஷணமன்னியில் பொறுமை அறிவின்மை முதலிய குணங்களைத்தவிர்த்து யோக்கியமான முறையில் பரஸ்பரம் ஒற்றுமையுடன் முஸ்லிம் சமூகம் ஒன்று படக்கூடிய விதமாய் ஒன்றுக்கொன்று ஒத்துமையாய் அறிவை வளர்க்கக் கூடிய வியாஸங்களை எழுதி விசால நோக்கமாய் பத்திரிகையை நடத்தி வருவீர்களென்று எதிர்பார்க்கின்றேன். இதுமுதல் தங்கள் பத்திரிகையில் நல்ல வியாசயங்களை எழுதி ஒற்றுமைக்குப் பங்கமேற்படாமல் (எவ்வுயிர்க்கும் அன்பாயிரு) என்பதற்கிணங்க குதற்கமற்ற வியாசங்களையும் பிர தூஷணமற்ற வியாஷங்களையும் பிரசுரித்து நாளடைவில் பத்திரிகை வளர்ந்தோங்கி வருமாறு றகுமானின்கிருபை செய்தருள்வானாகவும். தாங்களும் தேசியத் துறைகளில் உளைக்கக் கூடியவர்களானமையின் தர்காலம் வேண்டப்படும் ஒற்றுமையை குறித்து அதிகம் எழுதவேண்டுவதின்று:—வஸ்ஸலாம்.

ஒருசந்தா நேயர் B. A. 11/10/25,

பினங்கு நிருபம்.

அல்கலாம் 383-வது பக்கத்தில் பிரசுரமாயிருக்கும் கடிதம் வருமாறு:—

....பத்திராதிபர் அவர்கட்கு,

அ. கா. ஹனீபாகம்பெனி, செ. அ. முகம்மது ஹனீபாசாய புடைய அஸ்ஸலாமு அலைக்கும். தங்களால் வெளியிடப்பட்டு வரும் "அல்கலாம்" என்னும் மாத சஞ்சிகையை வரவேற்கும் ஒவ்வொரு முஸ்லிமும் அதிர்ஷ்டசாலி என்பது மிகையாகாது. காதியானி, அஹ்மதியாக்களும், அவர்களின் கோஷ்டியாரும் மலிந்து கிடக்கும் காலத்தில் அல்கலாமைப்போன்ற இன்னும் சில பத்திரிகைகள் வெளி வரின் நம் சமூகத்தாருக்குப் பெரிய உபகாரமாயிருக்கு மென்பதிலை யில்லை. தாங்கள் இக்காதியானிகளின் கூற்றை பொதுஜனங்களுக்கு நிதர்சனமாய் எடுத்துக்காட்டி வருவது அவர்கட்கு பெருந்தடையாக யிருப்பதைக் கொண்டு அவர்கள் "தாருல் இஸ்லாம்" என்னும் மாசிகையில் அல்கலாமையும் சங்கைபொருந்திய உலமாக்களையும் முஸ்லிம்களையும்பற்றி எதிர் முகமாயும் ஜாடையாயும் தங்கள் மனம் போனவாறு வசைச் சொற்களை வரைந்து வருவதை நேயர்கள் கவ னித்திருப்பார்க ளென்பதிலையமில்லை.

இன்னும் அவர்களின் இயக்கத்திற்கு "அல்கலாம்" தடை செய்யாதிருக்கின் அவர்களின் நோக்கம் அநேகமாய் கைகூடி எவ்வளவோ முஸ்லிம்களை அந்தகாரமென்னும் காதியானீ அஹ்மதிய மதத்தில் சேர்த்திருப்பார்கள். எத்தனையோ முஸ்லிம்களின் ஈமானைக் கெடுத்திருப்பார்கள். முஸ்லிம்கள் மேற்சொன்ன கெடுதிகளினின்றும் தப்பித்துக்கொள்ள அல்கலாம் பேருதவியாயிருந்ததை முன்னிட்டு அல்லாஹுதஆலாவைப் புகழ்கின்றேன்.

சிலமாதத்திற்குமுன் பினங்கு, சிங்கப்பூர், மலேயா முழுவதும் பிரயாணஞ் செய்தவரும் வேதநெறியறியாத மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானிக் கூட்டத்தில் ஒருவருமான பா. தாவூத்ஷா என்பவர் நமது அஹ்லே சுன்னத்து வல் ஜமாத்தாரின் உத்தமமான கொள்கையை மருந்திட்டுக் கொல்லவும் பல் வேறுவிதமாய்க்கெடுக்க வேண்டுமென்றும் கொண்டுவந்த பிரசாரத்தை 'அல்கலாம்,' "முஸல்மான்," "தாஜுல் இஸ்லாம்," "ஸைபுல் இஸ்லாம்" ஆகிய பத்திரிகைகளும், மேன்மை தங்கிய வேலூர்கனம் மௌலானா மௌல்வி 'ஷர்புதீன்ஸாயபு' அவர்களும் கண்டித்து உண்மைகொள்கைக்கு ஆதரவளித்து நமது பரிசுத்த மதம் பிரகாசிக்கும்படிச் செய்ததை

முன்னிட்டு நாம் உண்மை நாயனைப் பன்முறையும் பணிந்து போற்றுவோம்.

குறிப்பு:—

சே. அ. கெம்மது ஹனிபாசாஹிப்,

சந்தா நெ. 425

(1.) அக்டோபர்-மீ 10-உக்குப் பிறகு அல்காலமின் சந்தாதாரர்களாய்ப் பதிவு செய்யப்பட்டிருப்போர் அநாமதேயக் கடிதமெழுதிய வகுப்புக்குக் கோபத்தை மூட்டிய பிணங்கு நிரூபத்தை வாசித்திருக்கமாட்டார்களாதலின் அந்நிரூபத்தை மீண்டும் பிரசுரித்திருக்கிறோம்.

(2.) இந்நிரூபம் பிரசுரமாயிருக்கின்ற அல்கலாம் 10, 11 பிரதியை வாசித்ததாயும் அதிலடங்கியிருக்கும் விஷயங்கள் இனிமையாயும் முஸ்லிம்களைத் தட்டி எழுப்பக்கூடியனவாயும் இருக்கின்றனவென்றும், அல்கலாம் தோன்றியது தென்னாட்டு முஸ்லிம்களின் அதிர்ஷ்ட மென்றும் இதன் மூலமாய் நம் நாட்டிலுள்ள காதியானீ, அஹ்மதியா ஆகிய கெட்ட கொள்கைகள் சூரியனைக்கண்ட பனிபோல் ஒழிந்துவிடுவது திண்ணமென்று ஒருமௌல்வி சாஹிப் நமக்கெழுதியிருக்கிறார்கள். விஷயத்தை அறிந்து உண்மையாகவே புகழ, அல்லது இகழ அருகதையுள்ள சிறப்புற்ற உலமாக்கள் அல்கலாமின் சேவையை நன்னோக்கத்தோடு அங்கீகரித்து எமக்கு உற்சாகத்தை யூட்டிவரும் இந்நாளில் அநாமதேயக்கடிதங்களின் மூலமாய் அல்கலாமை களைக்கச் செய்துவிடலாமென்று கருதுவது விவேகமல்ல.

திருப்பத்தூர் படேசா.

கீழ்க்கரையிலிருந்து கண் வைத்தியம் செய்துகொள்வதற்காக மதுரை ஜில்லா திருப்பத்தூருக்கு வந்த ஒருவர் திருப்பத்தூரில் தங்கி விட்டார். இவர் சுமார் மூன்று வருஷங்களாகத் திருப்பத்தூரிலிருந்து வருகிறார். மஞ்ச குப்பம் படேசாவைச் சிலர் "அவ்லியா" வென்று கூறி கொண்டாடுவதைப் போலவே திருப்பத்தூரில் தங்கி யிருக்கும் படேசாவையும் சிலர் அவுலியா வெனக் கொண்டாடுகின்றனர். மஞ்ச குப்பம் படேசாவைக் கொண்டாடுகிறவர்களுள் முதன்மையாக பொதக் குடி அப்துல் கரீம் ஆலிம் சாகிப் இருப்பது போலவே திருப்பத்தூர் படேசாவைக் கொண்டாடுகிறவர்களுள் முதன்மையாக அபிராமம் அப்துல் காதர் ஆலிம் சாஹிப் இருந்து வருகிறார். ஆனால் மஞ்ச குப்பம் படேசாவைக் கொண்டாடும் திருப்பத்தூர் வாசி, திருப்பத்தூரிலிருக்கும் படேசாவை மறுப்பதும், மஞ்சக்

குப்பம் படேசாவை திருப்பத்தூரிலிருக்கும் படேசா மறுப்பதும் குறிப்பிடத் தக்கதே. திருப்பத்தூர் ஜனங்கள் மலபாதை செய்து வரும் ஒரு தோப்பில் திருப்பத்தூர் படேசாவின் உத்திரவுப்படி ஒரு கோரி கட்டப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் சுமார் நானூறு வருஷங்களுக்கு முன் ஒரு மகான் அடக்கமாகி யிருப்பதாயும் அம்மகான் தமக்கு கோரி கட்டவேண்டுமென்று திருப்பத்தூர் படேசா விடத்தில் கேட்டுக் கொண்டதாகவும் இவர் தம் சகாக்களுக் கறிவித்து மேற் கூறப்பட்டுள்ள கோரியைக் கட்டும்படி செய்தாரென்றும் திருப்பத்தூரிலுள்ள முக்கியஸ்தர்கள் அறிவிக்கின்றார்கள். திருப்பத்தூர் படேசா சம்பந்தமாய் நான் தெரிந்து கொண்டிருக்கும் மற்றவைகளை பிறகு அறிவிக்கிறேன்.

இங்ஙனம்

முஹம்மது ஹுஸைன் 5—12—25

கழுதைகளுக்கு கோரி.

"கோரி, தர்கா, தைக்கால் ஆகியவைகளைச் சீர் திருத்துவதற்காக துருக்கி அரசாங்கத்தார் முயன்று வருவது வெளிப்படை. இத்தகைய பொதுஸ்தானங்களை யொட்டி துருக்கி அரசாங்கத்தார் கண்டு பிடித்திருக்கும் விஷயங்களில் ஒன்று வருமாறு:—

"அனடோலியா" வைச்சார்ந்த ஒரு கிராமத்தில் ஒரு "பீர்" இருந்து வந்தார். இவரை ஜனங்கள் விசேஷமாய் மதித்துக்கொண்டாடி வந்தனர். இந்த பீருக்கு எண்ணிறந்த 'முரீது' களும் இருந்தார்கள். இந்த பீரின் ஆதிக்கத்தில் ஒரு கோரியுமுண்டு. இதன் மினாராக்கள் மிக்க உயரமுள்ளன. இக்கோரிக்குள் ஒரு பெரியமகான் அடக்கமாயிருப்பதாய் அறிவிக்கப் பட்டது.

கோரியி லடக்கமாயிருக்கும் மகானின் மீதுள்ள பக்தியை முன்னிட்டு பொது ஜனங்கள் பல கிரிகைகளைப் புரிந்து வந்தார்கள். இக்கோரிக்குச் சொந்தக்காரரான 'பீர்' சாஹிபின் முரீதுகளுள் ஒருவர் மக்கமா நகருக்குச் செல்ல பீர் சாஹிபிடம் அனுமதி கேட்டார். பீர் சாஹிப் தம் முரீது ஏறிச் செல்ல ஒரு கழுதையை அளித்து மக்கா யாத்திரை போய்வர அனுமதித்தார். மக்கமாநகர் செல்லும் வழியில் இக்கழுதை மரண மடைந்து. பீர் சாஹிபின் கழுதையைப் பீரை போலல்லவா மதிக்க வேண்டுமெனக் கருதி இந்த சிஷ்யர் கழுதையை அடக்கம் செய்து சமாதியைப் போர்வை கொண்டு போர்த்தி

அதன் சமீபமாய் இவர் இருக்க ஆரம்பித்தார். இச்சமாதியுள் ஒரு பெரிய மகான் அடங்கியிருப்பதாய் ஜனங்கள் நம்பி இச்சமாதியைக் கொண்டாடினார்கள். பழைய பீரின் இந்த சிஷ்யரும் ஒரு பெரிய பீராகக் கொண்டாடப்பட்டார். இவருக்கும் எண்ணிறந்த முரீதுகள் ஏற்பட்டு விட்டனர். இச்சமாதிக்கும் அளவற்ற சொத்தும் பொருளும் சேர்ந்து விட்டன. ஆகவே இச்சமாதிக்குக் கீர்த்தி வாய்ந்த பெருங் கோரி ஒன்று கட்டப்பட்டது. முந்திய பீரின்முரீதாகிய இந்த பீரும் சுகமாகவே வாழ்ந்து வந்தார்.

"அனடோலியர்"வின் கிராமத்திலிருந்த பீர் சாஹிப் தம் சிஷ்யரைத் தேடிக்கொண்டு மக்கமா நகரை நோக்கிச் சென்றார். வழியில் ஒரு பெருங் கோரி யிருப்பதைக்கண்டு அதை தரிசிப்பதற்காக உள்ளே சென்றார். அங்கு பலர் வீற்றிருந்தனர், அவர்களுள் ஒருவராகிய பீர் சாஹிபின் சிஷ்யர் பீர் சாஹிபுக்குப் பாதம் பணிந்தார். பீர் சாஹிப் தம் சிஷ்யர் அடைந்துள்ள உயர் பதவியைக் கண்டு சந்தோஷமுற்று தம் சிஷ்யரை நோக்கி இங்கு அடக்கமாயிருக்கும் மகானின் நாமமென்ன? வென்று வினவிய போது தாங்கள் அளித்த கழுதைதான் என்றார். பீர் சாஹிப் ஆச்சரிய மடைந்தவராய் தம் சிஷ்யரைப் பார்த்து "வெகு சிக்கிரத்தில் தாங்கள் என் அந்தஸ்தை அடைந்து விட்டீர்க"ளென்று கூறினார். சிஷ்யர் பீர் சாஹிப் கூறியது விளங்காமல் "தங்களின் எந்த அந்தஸ்தை யான் அடைந்து விட்டேன்." என்று பீர் சாஹிபிடம் வினவ பீர் சாஹிப் இங்கு அடக்கமாயிருக்கும் கழுதையின் பாட்டியே எம்கோரியில் அடக்கம் செய்யப் பட்டிருக்கிற தென்று விடையளித்தார்."

(மதீனா)

அன்னதானம்.

மகாத்மாகாந்தி " எங் இந்தியாவில் " பின்வருமாறு எழுதியிருக்கிறார் .—

" அன்னதானங்கள புண்ணியத்தைக் கொடுக்க கூடியதாகுமா? இதைப்பற்றி எவ்வளவு பரிசுத்தமான மனத்துடன் யோசனை செய்து பார்த்தாலும் அன்னதானங்கள் யோசனை இல்லாமலும் அறிவில்லாமலும் செய்யும் பாவமாகவே காணப்படுகிறது. இவ்வித அஞ்ஞான தர்மங்கள் தேசத்தில் அநேகஇடங்களில் நடைபெறுகின்றன. இதனால் ஏழைகள் சோம்பேறிகளாகவும் பாஷாண்டிகளாகவும்

அயோக்கியர்களாகவும் திருடர்களாகவும் மாறுகிறார்கள். இவர்களு டைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகப்படவும் செய்கிறது. இவ்வித தர்மங்களெல்லாம் கெடுதலாகவே முடிகின்றன. செல்வர்கள் தங்களுடைய தானத்திற்கும் தர்மத்திற்கும் தகுந்தபாத்திரத்தைத் தேடவேண்டும். எல்லாவித தானமும் தருமமும் புண்ணியமாகாது. யாருக்கு வேண்டுமானாலும் தானஞ் செய்வதென்பது புண்ணிய மாகாது. கூன் குருடு, நொண்டி ரோகி முதலியவர்களுக்கு அவசியம் பிச்சையிடவேண்டும். அவர்களுக்கு அன்ன மிடுவதோடு நில்லாமல் அவர்களிட மிருந்து விவேகத்தோடு வேலையும் வாங்கவேண்டும். ஆயிரக் கணக்கான ஜனங்கள் அசக்தர்களாகக் காணப்பட்டாலும் அவர்கள் வேலை செய்தாலல்லாது சாப்பாடு போடக் கூடாது. அவர் கள் சாப்பிடும் இடம் தனிமையான தாகவும் சந்தடி யற்றதாகவும் சுத்தமாகவும் இருக்கவேண்டும். கூன், குருடு, நொண்டி, ரோகி, இப்படிப் பட்டவர்களுக்குத் தனியான விடுதிகள்பல இருக்கின்றன. உதார குணமுள்ள ஜனங்கள் இப்படிப்பட்ட விடுதிகளுக்கு உதவ வேண்டும். அல்லது தங்கள் சக்திக்குத் தகுந்தபடி விடுதிகளில்லாத இடத்தில் விடுதிகள் அமைக்க வேண்டும். உணவுக்கு வழியற்ற ஏழைகளுக்கு ஒரு தொழில் தேடிக்கொடுப்பதுதான், அன்னதான மும் புண்ணியமுமே தவிர, அவர்களுக்கு பொங்கிப் போடுவதினால் அன்னதானத்தின் பயனில்லாமற் போவதோடு பாவமும் ஏற்படு கிறது. லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டுமானால் ராட்டினத்தைச் சுற்றச் செய்யவேண்டியது தான் சிறந்த அன்னதானமாகும்."

(குடிநூல்)

திமஷ்க்கில் பிரான்சிரியன் கொடுமை.

அரபியர்களின் முன்னேற்றம் நாகரீகம் கல்வித்திறமை முதலிய வைகளை உலகிற்கு நிதர்சனமாக்கிக் கொண்டிருந்த 'தமஸ்கஸ்' என் னும் "திம்ஷக்" நகரின்மீது பிரான்சியர் சுமார் 50,60 மணி நேரம் வரை பீரங்கிகளாலும் ஆகாய விமானங்களாலும் குண்டு பிரயோகம் செய்தனர். இக்குண்டு பிரயோகத்தால் "தமஸ்கஸ்" நகரில் அரை பாகம் தீக்கிரையாகி விட்டதென்றும் நிரபராதிகளான 25,000, ஜனங் கள் கொல்லப்பட்டு விட்டன ரென்றும் அறிவிக்கப்படுகிறது. இவர் கள் அநேகமாய் ஸ்திரீகள், வயோதிகர், குழந்தைகள் என்று பத்திரி

கைகள் கூறுகின்றன. சரித்திர பூர்வமான கட்டிடங்கள் தேவாலயங்கள் கண்காக்ஷிசாலைகள் ஆகியவைகளும் தகர்க்கப்பட்டுப் போயின. இத்தகைய கொடுமையே மேல்நாட்டின் நியாயம் சமத்துவம் நாகரீகம் போலும். பிரான்சியரின் இப்பெரும் அக்கிரமத்தை சர்வதேச சங்கத்திற்கு அறிவித்து பரிகாரம் தேடும்படி 'ஹகீம் அஜ்மல் கான்', 'டாக்டர் அன்ஸாரி' ஆகியவர்கள் மகாத்மாவைக் கேட்டுக் கொண்டதற்கு பிரிட்டிஷ் பிரன்சு ஆகியவர்களின் மற்றொரு நாமமே சர்வதேச சங்கமாக இருந்துவரும் நிலைமையில் அச்சங்கத்திற்குத் தெரிவிப்பதால் பயன் ஏற்படப் போவதில்லை என்று மகாத்மா கூறியுள்ளார். பிரான்சியரின் இவ்வக்கிரமச் செய்கை ஷாம் தேசவாசிகளுக்குப்பெரும் உணர்ச்சியை உண்டுபண்ணி விட்டது. இவர்கள் பிரான்சியரின் அடிமை விலங்கை முறித்தெரிந்து விட்டு சுயேச்சையைப் பெறுவதென்னும் தீர்மானத்தைச் செய்து கொண்டு பிரான்சியரை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். 'தமஸ்கஸ்' முதலிய தேசங்களில் சுயேச்சையைக் கோரி கிளர்ச்சி செய்தவர்களுள் "துரூசியர்" என்பவர்களே முதன்மையானவர்களாகும். இவர்கள் மகா யுத்தத்தின் போது நேச ராஜ்ய சைனியங்களோடு சேர்ந்து துருக்கியரை எதிர்த்துப் போர் புரிந்தவர்களல்லவா? இத்துரூசியர் நேச ராஜ்யங்களுக்குப் புரிந்த உதவிக்கு மேற்கூறிய பிரான்சியர் சன்மான மளித்து வருகின்றனர். மகா யுத்த காலத்தில் நேச ராஜ்யங்களின் ஏமாற்றத்திற்குட் பட்டு தங்கள் கரங்களாலேயே தங்களைக் கேட்டில் போட்டுக் கொண்ட துரூசியர் இன்று விழித்துக் கொண்டனர். துரூசியர் தங்களின் குற்றத்தை உணர்ந்து விட்டனர். சுய ஆக்ஷியை ஸ்தாபிக்க முற்பட்டு விட்டனர், அல்லாஹுதஆலா இவர்களின் நன் முயற்சிக்கு உதவி புரிவாராக. பிரான்சியரின் அநியாயத்தால் நாசமுற்றுத் தங்கள் சுயேச்சைக்காகப் பாடுபடும், ஷாம் தேசத்தவர்களுக்கு இஸ்லாம் உலகம் தம்மால் இயன்ற உதவியைச் செய்யக் கடமைப் பட்டிருக்கின்றது.

ஹிஜாஸும் நஜ்தும்

"ஹிஜாஸ்" என்னும் பரிசுத்த நாடு முஸ்லிம்களுக்கும் மட்டும் உரித்தானதாக இருக்கவேண்டுமென்பதை மறுக்கக் கூடிய முஸ்லிம்கள் இல்லை. இந்நாட்டில் முஸ்லிமல்லாதவர்களின் ஆதிக்கமாவது சம்பந்தமாவது இருந்து வர உண்மை முஸ்லிம்கள் சம்

மதிக்கமாட்டார்க ளென்பதும் வெளிப்படை. ஆனால் இந்நாட்டை பரிபாலனம் செய்ய அருகதையுள்ளவர் ஷரீப் ஹுஸைனா அல்லது நஜத் அமீரா? என்னும் விவாதம் இந்தியாவின் சில பாகங்களில் நடந்து வருகிறது. அநேகமாய் முஸ்லிம்களின் நன்மைக்கு பாதக மில்லாத முறையில் துருக்கியரின் ஆதிக்கத்தில் இருந்து வந்த இப்புனித நாட்டை ஷரீபு ஹுஸைன், சுய நலங்கருதி முஸ்லி மல்லாதவர்களின் தூண்டுகோலுக் கிணங்கி துருக்கியர்களுக்கு விரோதமாய் போர் தொடுத்து அவர்களிட மிருந்து மீட்டுக் கொண்ட வரலாற்றை அறியாதவர் கிடையாது. ஷரீபு ஹுஸைன் இந்நாட்டின் அரசரென்று வழங்கி வந்தவராயினும் இவர் இஸ்லாமின் விரோதிகள் ஆட்டிவைக்கத் தக்க பொம்மையாக இருந்து வந்ததையும் மறுக்கமுடியாது. இவர் இஸ்லாமின் லக்ஷியத் திற்கு விரோதமாய் ஹிஜாஸில் புரிந்த காரியங்களையும் இஸ்லாமிய கட்டளையை அவமதித்துப் புரிந்த அக்கிரமங்களையும் உலகம் மறக்க வியலாது. இவர் ஹிஜாஸை ஆக்ஷிபுரிந்த காலத்தில் ஹாஜிகள் அனு பவித்த கஷ்ட நிஷ்டூரங்கள் அளவு கடந்தன. நஜத் துருக்கி முத லிய தேச முஸ்லிம்கள் ஹஜ்ஜு என்னும் கடமையை நிறைவேற்று வதற்கு மக்கமா நகர் வர முடியாத முறையில் ஷரீப் ஹுஸைன் தம் செல்வாக்கை ஹிஜாஸில் ஸ்தாபித்தார். ஆகவே இவ்வனியாயக் கார ஷரீபின் அசுத்தமான ஆதிக்கத்திலிருந்து ஹிஜாஸ் என்னும் புனித நாட்டை கைப்பற்றி முஸ்லிம் உலகத்தின் பொது நாடாகச் செய்ய வேண்டியது நாற்பது கோடி முஸ்லிம்களின் கடைமையாக இருந்தது. இப்பெருங்கடமையை நிறைவேற்றும் பாக்கியத்தை அல் லாஹு த ஆலா நஜத் சுல்தான் அவர்களுக்கு அளித்தான். ஆனால் நஜத் காரர்கள் "தாயிப்" மக்கமா நகரம் ஆகிய விடங்களில் அநேக அக்கிரமங்களைப் புரிந்தார்களென்றும், பல மகான்களின் சமாதிக ளைத் தகர்த்து விட்டார்களென்றும் ஹம்ஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கோரியை இடித்து விட்டார்களென்றும் இவர்களின் குண்டுப் பிரயோகத்தால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 'ரௌலாஷரீ' பைச்சார்ந்த மினாராவுக்குப் பின்னம் ஏற்பட்டு விட்டதென்றும் பறை சாற்றி நஜத் சுல்தான் அவர்கள் ஹிஜாஸை பரிபாலனம் செய்ய தரமற்றவர்களென்றும் சிலர் கூறுகின் றனர். இவர்கள் அநேகமாய் ஷரீப் ஹுஸைன் ஹிஜாஸில் புரிந்த அளவற்ற கொடுமைகளைக் கண்டிக்காமல் மௌன விரதம் பூண்டு மூலையில் பதுங்கிக் கிடந்தவர்களென்பது குறிப்பிடத்

தக்கதல்லவா? கிலாபத்திற்கும் இஸ்லாமுக்கும் பெருங் கேடு நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் இஸ்லாம் கிலாபத்து ஆகியவைகளின் நன்மையைக் கோறி நடந்த கிளர்ச்சியில் இக் கிளர்க்சியிலீடுபட்டு சிறை சென்றதில் சிறிதும் சம்பந்தமில்லாது ஒதுங்கிக் கிடந்தவர்கள் இன்று ஹிஜாஸின் மீது அன்பு கொண்டு விட்டதாய்க் கூறி வெளிவருவது விந்தையே.

'நஜத் சுல்தான்' அவர்கள் மக்கமா நகரை அடைவதற்கு முன் மக்கமா நகரம், தாயிப் ஆகிய நகரில் சிற்சில தவறுகள் நிகழ்ந்திருப்பினும் நஜத் சுல்தான் அவர்கள் மக்கமா நகருக்கு விஜயம் செய்த பின்னர் எத்தகைய கெடுதியும் நடை பெறவில்லை என்றும் ஹம்ஜா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கோரி, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ரௌலாஷரீப் ஆகியவைகளுக்குப் பின்னம் ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப் படுவதெல்லாம் பொய் என்றும் 'நஜத் சுல்தான்' அவர்கள் அறிவிக்கும் செய்தியை நம்பக்கூடிய முஸ்லிம்களே நம் நாட்டில் பெரும் பான்மையோராக விருக்கின்றனர். ஆனால் உண்மையை அறிந்து வருவதற்காக அகில இந்திய கிலாபத் கமிட்டி ஒரு தூதுவக்கோஷ்டியை அனுப்பியிருக்கிறது. இத் தூதுவக்கோஷ்டியின் உண்மையான சேவை இஸ்லாமிய உலகத்திற்குப் பெரும் நன்மையை அளிக்கத்தக்கதாக இருக்கும்படி அல்லாஹுத ஆலா அருள் புரிவானுக.

அல்கலாம் இரண்டாவது வால்யூமின் முடிவுரை.

"அல்கலாம்" இரண்டாவது வால்யூமின் முடிவுரை யெழுதும் படி கிருபை செய்த அல்லாஹுத ஆலாவைப் புகழ்கின்றேன். இது "அல்கலாம்" இரண்டாவது வால்யூமின் கடைசிச் சஞ்சிகையாகும். இன்ஷா அல்லாஹுத ஆலா ஜனவரியில் மூன்றாவது வால்யூமின் ஆரம்ப சஞ்சிகை வெளிவரும்.

அல்கலாம் தோன்றி 18 மாதங்களாகின்றன. இப்பதினெட்டு மாத காலத்தில் அல்கலாம் புரிந்துள்ள சேவை போற்றத்தக்கதாக இல்லை என்பதை ஒப்புக் கொள்வதோடு இதன் குறையை யான்மறுக்க வில்லை. ஆகவே அல்கலாம் ஏதேனும் நற்சேவை புரிந்திருப்பினும் இதையொட்டி ஜவங்களின் புகழை விரும்பாமல் மறுக்க முடியாத என் பல்ஹீனம், என் அறியாமை, என் குறை முதலியவைகளை

யொட்டிய எச்சரிக்கை உபதேசம் ஆகியவைகளைச் செவியுற்று சீர் திருந்த அல்லாஹுதஆலா எனக்குத் தௌபீக் செய்வானாக.

அல்கலாமின் அபிவிருத்தியைக் கோரிவிடா முயற்சியோடு உழைப்பவர்கள் எந் நன்றி நிறைவேற்றலை எதிர்பாராதவர்களாக இருக்கலாம். ஆயினும் நான் இந் நண்பர்களுக்கு நன்றி நிறைவேற்றாம லிருக்க முடியுமா? இஸ்லாமின் மீதுள்ள அன்பை முன்னிட்டு அல்கலாம் பிரசாரத்தைச் செய்துவருவோர்க்கு என் நாவும் எழுதுகோலும் நன்றி நிறைவேற்றாதிருப்பினும் என்ஹிருதயம் தன் கடமையைச் செய்யாம லிருக்கவில்லை என்பது திண்ணம்.

அல்கலாமை நடத்துவது சம்பந்தமான என் உத்தேசம் பகிரங்கமாக வேண்டுமெனக் கருதி முன்வரைந்துள்ளதை மீண்டும் இதனடியில் பிரசுரிக்கப்படுகின்றது,

"ஒவ்வொருவரும் நல்லதையேவி கெடுதியை யகற்றவேண்டுமென்று அல்லாஹுதஆலா இட்டிருக்கும் கட்டளையை நிறைவேற்ற நம்மவர்களுக்கு இஃதொரு சாதனமாக விருக்குமென நம்பியே "அல்கலாமை" நடத்த முன்வந்தோம்.

முஸ்லிம்கள் தம்மதக் கடமையைச் செய்வதற்கு வேண்டியவைகளை வெளியிட இத்தகைய சஞ்சிகை இன்றியமையாததென்றே பல பெரியார்கள் கூறுகின்றனர்.

நல்லதையேவி கெடுதியை யகற்றுவது என்னும் லக்ஷியத்தைக் காட்டினும் "அல்கலாமை" நடத்துவதில் எமக்கு வேறு பெரிய லக்ஷியம் கிடையாது. ஆனால் அல்கலாமை நடத்துவதற்கு மற்றவர்களைப் போல் யாமும் பொருளைச் செலவுசெய்ய வேண்டியதாயிருக்கிறது. "அல்கலாமை" இனாமாகவழங்க எமக்கு போதிய ஐஸ்வரியமில்லாததால் சந்தாத் தொகையை எதிர்பார்க்கவேண்டியிருப்பதை யொட்டியும் வருந்தாமலிருக்கக் கூடவேயில்லை. பிரயாசை பொருள் சிலவு ஆகியவைகளுக் கேற்ப "அல்கலாம்" நம்மவர்களுக்கு நன்மை பயப்பதாக விருந்தால் இது நடைபெற வேண்டும். இன்றேல் இது நின்றுபோவது உத்தமமல்லவா?

உண்மையான ஹிருதயத்தோடு "அல்கலாம்" வெளியிடப்பட்டிருக்குமாயின் இதனால் ஏற்படும் நன்மையின் ஒரு பாகத்தையாவது கண்டுகளிக்க எமக்கு அல்லாஹுதஆலா அருள் புரிவானாக. இன்றேல் இது நம்மவர்களுக்குக் கேடிழைக்காமலும், உண்மையான எந்த ஸ்தாபனத்தையும் பொறுமையின் காரணமாக "அல்கலாம்" கெடுத்துவிடாமலும் அல்லாஹுதஆலா காப்பாற்றுவானாக.

அசத்தியத்திற் கஞ்சாது "அல்கலாம்" சத்தியத்தைத் தன்னுள் கொண்டதாக விருந்தால் அல்லாஹு தஆலா இதற்கு அபிவிருத்தியைத் தந்தருள்வாளுக. இன்றேல் இது ஒழிந்து போகக் கடவது.

அறிவிப்பு.

அல்கலாம் சந்தாதாரர்களின் சமுகத்தில் ஒரு வேண்டுகோள் :—

இது அல்கலாம் இரண்டாவது வால்யூமின் கடைசி சஞ்சிகையாகும். 1924 அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஆகிய மாதங்களில் சந்தா செலுத்தியவர்கட்கும் இச்சஞ்சிகை அனுப்பப்படுகிறது. இவர்களும் 1925 ஜனவரியில் சந்தா செலுத்தியவர்களும் 1926 ல் சந்தாதாரராக இருந்து அல்கலாமை ஆதரிக்க விரும்பின் இச்சஞ்சிகையைக் கண்டதும் சந்தா விகிதத்தை மணியார்டர் மூலியமாய் அனுப்பி விட வேண்டியது. அல்லது வி. பி. அனுப்பும் படி ஒரு கார்டு எழுதித்தெரிவிக்கவேண்டியது. இன்றேல் 1926 ஜனவரிமீ அல்கலாம் தங்களின் சமுகத்தை யடைய முடியாமலிருக்கு மென்பதை யறிவீர்களாக.

அல்கலாம் இரண்டாவது வால்யூமை பைண்டு செய்து வைத்துக் கொள்ளக்கருதுவோர்க்கு இதன் முழு அட்டவணை அனுப்பப்படும்.

பைண்டு செய்த அல்கலாம் 2 வது வால்யூம் வேண்டுவோர் எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.